Registered as a Newspaper in Sri Lanka
விலை ரூபா: 10.00

# வலம்புரி
Valampurii

பக்கங்கள்: எட்டு

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2038 தை 19 வெள்ளிக்கிழமை (02.02.2007) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 45

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.
ராம்கோ சீமெந்து

## யாழ்ப்பாண ப.நோ.கூட்டுறவுச் சங்க தலைவர் கணநாதன் சுட்டுக்கொலை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் எஸ்.ரி.கணநாதன் (வயது 61) நேற்றுக் காலை ஆயுததாரிகளால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

கண்டி வீதி அரியாலையில் வசித்து வந்த இவர் முன்னாள் மின்சார சபை பொறியியலாளராவார். நேற்றுக் காலை 7.30 மணியளவில் வீட்டிலிருந்து புங்கங்குளம் வீதியில் வாசிகசாலைக்கு முன்பாகவுள்ள தண்ணீர் குழாயில் குடி நீர் பெறச் சென்ற போது பின் தொடர்ந்து சென்ற ஆயுததாரிகள் தலைப் பகுதியில் துப்பாக்கிப்பிரயோகம் மேற் கொண்டு விட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

சம்பவம் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்ட யாழ்.மாவட்ட நீதிவான் இ.த. விக்னராஜா சடலத்தை பிரேத பரிசோதனையின் பின் உறவினர்களிடம் ஒப்படைக்குமாறு கோப்பாய் பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

யாழ்.பலநோக்குக் கூட்டுறவுச் சங்க உப தலைவராக பதவி வகித்து வந்த கணநாதன் 2005 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் முன்னாள் தலைவர் சொலமன் சிறில் பதவி விலகியதை அடுத்து தலைவராக பதவியேற்றார். (எ-1,3)

## ஜாதிக ஹெல உறுமயவினர் அமெ.தூதுவருடன் சந்திப்பு

(கொழும்பு)

ஜாதிக ஹெல உறுமய கட்சியினர் இன்று அமெரிக்க தூதுவரை சந்திக்கவுள்ளனர். அமெரிக்க தூதுவரின் அழைப்பை ஏற்றே இந்த சந்திப்பு நிகழ இருப்பதாக ஜாதிக ஹெல உறுமய தெரிவித்துள்ளது.

நாட்டில் தற்போதைய சூழ்நிலை குறித்து இந்த சந்திப்பின்போது ஆராய இருப்பதாக ஜாதிக ஹெல உறுமயவின் பேச்சாளர் நிசாந்த வர்ணசிங்க தெரிவித்துள்ளார். (ச-3)

# யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை பேண இரு தரப்பினரும் உறுதியளிப்பு!

## கண்காணிப்புக் குழு தெரிவிப்பு

(கிளிநொச்சி)

போர் நிறுத்த உடன்படிக்கையை தொடர்ந்தும் பேணுவதில் அர்ப்பணிப்புடன் இருப்பதாக அரசாங்கமும் விடுதலைப்புலிகளும் மீண்டும் கூறியுள்ளதாக இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு தெரிவித்துள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகளின் உறுப்பினர்களுடன் கிளிநொச்சியில் போர் நிறுத்த கண்காணிப்புக்குழுவின் பிரதிநிதிகள் நேற்று முன்தினமும் நேற்றும் பேச்சுவார்த்தை நடாத்தியபோது இவ் உறுதிமொழி வழங்கப்பட்டதாக குழுவின் பேச்சாளர் தொர்பினூர் ஓமர்சன் இதனைத் தெரிவித்துள்ளார். (08 ஆம் பக்கம் பார்க்க)

## நாட்டில் இன்று அரசாட்சிக்கு பதிலாக வேடிக்கை காட்சியே நடைபெறுகிறது

### மனோகணேசன் எம்.பி.தெரிவிப்பு

(கொழும்பு)

225 பாராளுமன்ற உறுப்பினர்களில் இதுவரை 103 அமைச்சர்களை பதவியில் அமர்த்தியிருப்பதன் மூலம் எமது நாட்டில் இன்று அரசாட்சிக்குப் பதிலாக வேடிக்கையான கண்காட்சியே நடைபெறுகின்றது என்று மேலக மக்கள் முன்னணியின் தலைவரும் கொழும்பு மாவட்ட எம்.பியுமான மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது; ஒரே விவகாரம் தொடர்பில் ஒன்பது பேர்களை அமைச்சர்களாக நியமித்து எந்த விவகாரம் எவரது பொறுப்பில் இருக்கிறது என்பதை புரிந்து கொள்வதற்கு அரசாங்க அதிகாரிகளே தடுமாறும் ஒரு விசித்திரம் இன்று எமது நாட்டில் நிலவுகின்றது.

உலகத்திலேயே மிக அதிகமான அமைச்சர்கள் தொகையை நடைமுறையாக்கியதன் மூலம் எமது நாட்டை உலகம் கைகொட்டிச் சிரிக்கும் நிலைமைக்கு ஆட்சியாளர்கள் தள்ளியுள்ளார்கள்.

அதேவேளையில் தேசிய இனப்பிரச்சினையின் தீர்வுக்கான ஒருமித்த அணுகுமுறையை உருவாக்குவதற்காக கொண்டு வரப்பட்டதாகச் சொல்லப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தை அப்பட்டமாக மீறி ஐ.தே.க. உறுப்பினர்கள் (08 ஆம் பக்கம் பார்க்க)

## அதிகாரப் பகிர்வை முன்வைத்து பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும்

### இந்தியா வலியுறுத்தல்

(கொழும்பு)

இலங்கை இனப்பிரச்சினையினைத் தீர்க்க உரிய அதிகார பகிர்வை முன்வைக்குமாறு இந்தியா இலங்கை அரசாங்கத்திடம் வேண்டுகோள் விடுத்துள்ளது. தற்போதைய சூழ்நிலையில் அதனை முன்வைக்க முடியுமென இந்தியா சுட்டிக்காட்டியிருப்பதாக ஐ.என்.ஏ.செய்திச்சேவை தெரிவித்துள்ளது.

இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் ரோகித போகொல் (08 ஆம் பக்கம் பார்க்க)

## வெளிவிவகார அமைச்சர் ஜேர்மன் பயணமானார்

(புதுடில்லி)

வெளிவிவகார அமைச்சர் ரோஹித போகொல்லாகம இந்தியாவிலிருந்து நேற்று ஜேர்மன் பயணமானார். பதவியேற்றவுடன் நேற்று முன்தினம் இந்தியாவுக்கு சென்ற வெளிவிவகார அமைச்சர் அங்கிருந்து நேற்று ஜேர்மனுக்கு பயணமானார்.

இரு தரப்பு உறவுகளையும் பலப்படுத்தும் நோக்கத்திலேயே அமைச்சர் இந்த விஜயத்தை மேற்கொண்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சின் ஊடகச் செயலாளர் எம்.ஆர். ஹர்சன் (08 ஆம் பக்கம் பார்க்க)

## கடத்தப்பட்ட இளைஞன் நேற்று சடலமாக மீட்பு

கடந்த 30 ஆம் திகதி காணாமல் போன இளைஞன் நேற்றுக் காலை கோப்பாய் இராஜ வீதியில் வெட்டுக்காயங்களுடன் சடலமாக மீட்கப்பட்டார். சடலமாக மீட்கப்பட்டவர் நல்லூர் மூத்த விநாயகர் வீதியைச் சேர்ந்த ஜெயக்குமாரன் மயூரன் (வயது 27) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்ட யாழ்.மாவட்ட நீதிவான் இ.த. விக்னராஜா சடலத்தை பிரேத பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்குமாறு கோப்பாய் பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (ச-5)

## சுதந்திரக்கட்சியிலிருந்து 25 பேர் ஐ.தே.கட்சிக்கு தாவுகின்றனர்!

### வஜித அபயவர்த்தன தெரிவிப்பு

(கொழும்பு)

ஆளும் சுதந்திரக்கட்சியில் இருந்து குறைந்தது 25 பேர் விரைவில் வெளியேறி ஐக்கிய தேசியக்கட்சியுடன் இணைந்து கூட்டமைப்பை உருவாக்கவுள்ளதாக ஐக்கிய தேசியக்கட்சியின் காலி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வஜித அபயவர்த்தன தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக்கட்சியிலிருந்து பதவிக்காகவும் பணத்திற்காகவும் சுதந்திரக்கட்சிக்குச் சென்றவர்கள் மிகக்குறுகிய காலமே பதவியை அனுபவிப்பார்கள் என்று கூறிய அவர் ஆளும் கட்சியிலிருந்து பெருந்தொகையானவர்கள் வெளியேறும் போது எப்படியும் அவர்கள் மக்களை மீண்டும் சந்திக்கும் தேவை உருவாகும் என்று குறிப்பிட்டார்.

ஐக்கிய தேசியக்கட்சியில் இருந்து கொண்டு அதன் தலைவர் (08 ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்நெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## கோவிலில் திருட்டு

கட்டப்பிராய் அம்மன் கோவில் உண்டியலை உடைத்துத் திருடிய கள்வன் மடக்கிப் பிடிக்கப்பட்டு கோப்பாய்ப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

நேற்று முன்தினம் மாலை அவர் உண்டியலை உடைத்துக் கொண்டிருந்தபோது கோவிலுக்குச் சென்ற பக்தர்களால் மடக்கிப் பிடிக் கப்பட்டார்.

அன்று கல்வியங்காட்டிலுள்ள ஆலயம் ஒன்றிலும் திருட்டு இடம்பெற்றுள்ளது. அங்கு திருடப்பட்ட பணம் அயலிலுள்ள காணி ஒன்றில் மீட்கப்பட்டுள்ளது. (ச-127)

## வல்வெட்டித்துறையிலிருந்து பதினேழு பேர் நேற்று முன்தினம் இராமேஸ்வரம் சென்றனர்

மூன்று நாட்கள் கடலில் தத்தளித்த இலங்கை அகதிகள் 17 பேர் நேற்று முன்தினம் இராமேஸ்வரம் சென்றடைந்துள்ளனர்.

வல்வெட்டித்துறையிலிருந்து 9 குடும்பங்களைச் சேர்ந்த 11 ஆண்கள், 3 பெண்கள், 3 குழந்தைகள் அடங்கலாக 17 பேரே இராமேஸ்வரம் ஓலைக்குடாக் கடற்கரைக்குச் சென்றதாகத் தினமணிப் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இவர்கள் குறிகாட்டுவான் அடைந்து பின்னர் அங்கிருந்து படகுமூலம் கடந்த ஜனவரி 28 ஆம் திகதி நெடுந்தீவுக்குச் சென்றுள்ளனர். அங்கு, இந்தியா செல்ல வாடகைப் படகுகளைத் தேடியபோது யாரும் வராததால் பெரிய கட்டுமரத்தில் 29 ஆம் திகதி புறப்பட்டனர்.

மூன்று நாள் கடலில் தத்தளித்து நேற்று முன்தினம் காலை ஓலைக்குடாக் கடற்கரை பகுதிக்கு வந்தனர். இவர்களை அப்பகுதி பொதுமக்கள் பொலிஸ் நிலையத்திற்கு அனுப்பி வைத்தனர்.

அங்கு இன்ஸ்பெக்டர் சந்திரசேகரன் மற்றும் பொலிஸார் விசாரணை நடத்தி மண்டபம் அகதி முகாமுக்கு அனுப்பினர் என அச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

## விழிப்புணர்வு கருத்தரங்கு

மாணவர்கள் மத்தியில் வீதிஒழுங்கு முறை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக ஜனசக்தி இன்சூரன்ஸ் கம்பனி மேற்கொண்டுள்ள பிரசாரத் திட்டத்தின் முதற் கட்டமாக இன்று காலை 9.30 மணி முதல் 11.30 மணிவரை கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் விழிப்புணர்வுக் கருத்தரங்கை நடத்தவுள்ளது.

இக் கருத்தரங்கில் யாழ்.பல்கலைக்கழக தமிழ்த் துறைத் தலைவர் கலாநிதி எஸ்.சிவலிங்கராஜாவும் யாழ்.போதனா வைத்தியசாலையின் இரத்தவங்கியின் வைத்திய அதிகாரி வைத்தியகலாநிதி உமாசங்கரும் கலந்து கொள்வார்கள். (து)

## பொலிஸார் மீது கைக்குண்டுத் தாக்குதல்

(வவுனியா)

வவுனியா பண்டாரிக்குளம் பகுதியில் நேற்று இரவு 7.10 மணியளவில் பொலிஸார் மீது கைக்குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இத் தாக்குதலின் போது இரண்டு பொலிஸார் காயமடைந்துள்ளனர். இவர்கள் இருவரும் அநுராதபுர வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதாகக் கூறப்படுகின்றது. (ச-3)

## முன்பள்ளி ஆசிரியர்களுக்கு உலர் உணவு விநியோகம்

வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச சபை எல்லைக்குட்பட்ட முன்பள்ளி ஆசிரியர்களுக்கு உலர் உணவு விநியோகிக்கப்படவுள்ளது.

இவ்விநியோகம் இன்றும் நாளையும் இடம்பெறும் என பிரதேச சபைச் செயலாளர் குலநாயகம் அறிவித்துள்ளார். (ச-101)

## வடக்குக் கிழக்குப் பிரதேசத்தை ஈழதேசம் என அழைக்க வேண்டும்

### லிபரல் கட்சி யோசனை

(கொழும்பு)

இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வுக்காக ஐக்கிய இலங்கைக்குள் சமஷ்டித் தீர்வை ஏற்றுக் கொள்ளுமாறு லிபரல் கட்சி ஜனாதிபதியிடம் கோரியுள்ளது.

இதற்காக அந்தக் கட்சி முழுமைத் தகவல்களைக் கொண்ட யோசனையினை ஜனாதிபதியிடம் முன்வைத்துள்ளது. கட்சியின் யோசனைப்படி அனைவருக்கும் சம உரிமை வழங்கப்படும் வகையில் பிரச்சினைத் தீர்க்கப்பட வேண்டும் எனக் கோரப்பட்டுள்ளது.

இதற்காக இனவீதம், வாழ்க்கை முறை, கலாசாரம், சூழல், சமூகம் போன்ற அடிப்படையில் மாகாணங்கள் வரையறுக்கப்பட வேண்டும்.

களுத்துறை , கொழும்பு, கம்பஹா , புத்தளம் ஆகிய மாவட்டங்கள் இணைக்கப்பட்டு அது கோட்டை அல்லது சீதாவாக்க தேசம் என அழைக்கப்பட வேண்டும்.

கண்டி, மாத்தளை ,கேகாலை, இரத்தினபுரி, நுவரெலியா மற்றும் பதுளை ஆகியன இணைக்கப்பட்டு அது உடரட்ட அல்லது மலையகம் என்ற பெயரில் அழைக்கப்பட வேண்டும்.

காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை, மொனறாகலை ஆகிய இணைக்கப்பட்டு றுகுணு தேசம் என அழைக்கப்பட வேண்டும்.

குருநாகல், அநுராதபுரம், பொலநறுவ ஆகியன இணைக்கப்பட்டு அது ஜெயறட்ட தேசம் என அழைக்கப்பட வேண்டும்.

இந்நிலையில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு, மன்னார், திருகோணமலை , மட்டக்களப்பு என்பன இணைக்கப்பட்டு அது ஈழதேசம் என அழைக்கப்பட வேண்டும் என லிபரல் கட்சி தெரிவித்துள்ளது.

இந்த யோசனைக்காக அந்தக் கட்சி இலங்கையின் வரலாறு, காலனித்துவம் உட்பட பல அம்சங்களை சுட்டிக்காட்டியுள்ளது. (ச-3)

## வந்தாறுமூலையில் கைதான 14 பேர் விளக்கமறியலில்

(மட்டக்களப்பு)

வந்தாறுமூலை கிழக்குப் பல்கலைக்கழகத்திற்கு அருகில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கிளைமோர்த் தாக்குதலையடுத்து பொலிஸாரால் கைது செய்யப்பட்ட 58 பேரில் 14 பேர் சந்தேகத்தின் பேரில் தொடர்ந்தும் விசாரணை செய்யப்பட்டு வருகின்றனர்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இச் சம்பவத்தினையடுத்துப் பொலிஸாரும் படையினரும் நடத்திய சுற்றிவளைப்பின்போது 58 பேர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டதாக ஏறாவூர் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவர்களில் 44 பேர் பிணையில் விடுவிக்கப்பட்டதாகவும்ஏனையவர்கள் மேலதிக விசாரணைக்காக தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தடுத்து வைக்கப்பட்டுள்ளோரைத் தொடர்ந்து விசாரணை செய்ய நேரிட்டால் நீதிமன்றத்தின் உத்தரவைப் பெறவும் எண்ணியுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (எ-3)

## ஐ.தே.க.அங்கத்தவர்களின் நலனுக்காக செயற்படுவேன்

### அமைச்சர் நவீன் திஸநாயக்க உரை

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சி அங்கத்தவர்கள் எதிர்நோக்கியுள்ள அசௌகரியங்களைத் தீர்க்கும் பொருட்டு செயற்படப் போவதாக அமைச்சர் நவீன் திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

தன்மீது நம்பிக்கை வைத்து ஐக்கிய தேசியக் கட்சியினர் செயற்பட்டமைக்கு அவர் நன்றி தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சி அங்கத்தவர்களுக்கு ஏற்பட்டுள்ள அநீதிகள், அவர்களின் பிள்ளைகளின் தொழில் வாய்ப்பு, காணிப் பிரச்சினைகள் என்பவற்றைத் தீர்த்து ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் தலைமையிலும் கருஜெயசூர்யவின் தலைமையிலும் பாரிய வேலைத்திட்டங்களை நிறைவேற்ற முடியும் என அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து விலகப் போவதில்லை எனவும் கூறினார்.அமைச்சர் நவீன் திஸநாய்க்கவை வரவேற்கும் வைபவம் நேற்று நுவரெலியாவில் நடைபெற்றது.

அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார். (ச)

## திருமலையில் ஆயுதம் மீட்பு

திருகோணமலை மூதூர் வைத்தியசாலைக்கு அருகில் ஆயுதங்கள் மீட்கப்பட்டுள்ளன. பிரதேசவாசி ஒருவர் கொடுத்த தகவலின் அடிப்படையில் பொலிஸார் இவ் ஆயுதங்களை மீட்டுள்ளதாக தேசிய பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

ரி-56 ரக துப்பாக்கி ஒன்று, 2மகசீன்கள், 3 கைக்குண்டுகள், 2 மிதிவெடிகள் ஆகியவை மீட்கப்பட்டுள்ளன. (ச)

## மூன்று கொள்ளையர்கள் பொருள்களுடன் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், இணுவில் மற்றும் அளவெட்டிப் பகுதியில் மூன்று திருடர்களை இராணுவம் கைது செய்துள்ளதாக பலாலி படைதலைமையகம் தெரிவித்துள்ளது.

கோண்டாவில் கிழக்கு, கொக்குவில் மற்றும் அளவெட்டிப் பகுதிகளைச் சேர்ந்தவர்களே கைது செய்யப்பட்டுள்ளதாக இராணுவம் தெரிவித்துள்ளது.

இவர்களிடமிருந்து இரண்டு தங்க வளையல்கள், வீடியோ டெக், தொலைக்காட்சிப் பெட்டி மற்றும் 14 சீடிக்கள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளதாகவும், கைது செய்யப்பட்ட திருடர்கள் சுன்னாகம் பொலிஸில் ஒப்படைக்கப்பட்டதாகவும் அச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## வெள்ளி நற்சிந்தனை

## நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி

**கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்**

உலகத்தில் வாழும் உயிர்களெல்லாம் உணவு உண்ணும் நாளாந்தக் கடமையைத் தமக்குரிய நிலைக்கேற்றவாறு நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றன. பகுத்தறிவு பெற்ற மனிதனுடைய வாழ்க்கையில் உணவுப் பழக்கம் செம்மையானதொரு செயற்பாடாக இருந்ததை நம் முன்னோரது இலக்கியப் பதிவுகளால் அறியமுடிகிறது. இயற்கையோடு இணைந்து நிலத்தைப் பண்படுத்திப் பயன் அடைந்த மக்கள் நிலத்துப்பெறும் விளைபொருள்களின் சுவைகளை நன்கறிந்திருந்தனர். அதனால் தமிழர் வாழ்வியலில் உணவு உண்பது என்பது திட்டமிடப்பட்ட செயற்பாடாக இருந்ததையும் பல பாடல்கள் சுட்டிக் காட்டியுள்ளன. அவற்றின் மூலம் உணவின் சுவை அறுவகையாகப் பகுத்து அறியப்பட்டிருந்ததையும் உணரமுடிகிறது. 'அறுசுவை உண்டி' என்ற சிறப்புத் தொடரின் பயன்பாடும் இதற்குச் சான்றாக உள்ளது.

'உணவூட்டல்' என்னும் செயற்பாட்டைப் பெண்களே பொறுப்பேற்று எல்லோருடைய உடல்நலத்திற்கும் ஏற்பத் தொழிற்பட்டு வந்தனர். ஆணும் பெண்ணும் திருமணம் என்ற நிலையில் இணையும்போது ஒரு சடங்காக உணவூட்டல் முன்னர் நடைபெற்றது. 'சோறு குடுப்பித்தல்' என்ற தொடரின் பயன்பாடு கிராமப்புறங்களில் இன்னமும் இதற்குச் சான்றாகப் பேச்சுவழக்கில் பயன்படுத்தப்படுகிறது.

'இல்லாள்' என்ற தகுதிப்பாடு பெற்ற பெண்ணின் 'உணவூட்டல்' தாய் என்ற தனித்துவ நிலையில் தொடர்ந்தது. பாட்டி என்ற நிலையில் பட்டறிவாய் உயர்ந்து நின்றது. ஆனால் இந்தச் செயற்பாட்டிற்குரிய செல்வத்தைப் பற்றிய கவனம் தேவை என்பதை நாம் அனைவரும் உணரவேண்டும்.

நம்முடைய உண்ணும் செயற்பாட்டில் முன்னோரின் பட்டறிவைப் பின்பற்ற வேண்டும். மனையாளுடைய கையினால் அறுசுவை உண்டி பெறும் செல்வரும் எதையும் புறந்தள்ளாது உணவை வீணாக்காமல் உண்ண வேண்டும். கைத்தல், புளித்தல், உறைத்தல், உவர்த்தல், துவர்த்தல், தித்தித்தல் என அறுசுவை உணவுகளையும் உண்டு முடித்த பின்னர் மேலதிகமாக வேறு பண்டங்களை உண்ணும் செல்வரும் ஊதாரித்தனத்தால் செல்வத்தைத் தொலைக்க நேரிடும். அப்போது வறியராகி ஓரிடத்துச் சென்று கூழை இரந்து உண்ணும் நிலையும் ஏற் படலாம். இதனை நாம் மனங்கொள்ள வேண்டும். இன்றை வாழ்வியலில் உணவை வீணாக்கும் உணவூட்டல் பழக்கம் தோன்றியுள்ளது. இது எம்மை வறுமையில் ஆழ்த்தி விடும். எனவே நாலடியை நினைந்து நாளும் செயற்படுவோம்.

அறுசுவை யுண்டி யமர்ந்தில்லா ளூட்ட
மறுசிகை நீக்கியுண் பாரும் – வறியராய்ச்
சென்றிரப்ப ரோரிடத்துக் கூழெனிற்
செல்வமொன்
றுண்டாக வைக்கற்பாற் றன்று

(நாலடியார்:1)

## நேர்முகப் பரீட்சையை யாழில் நடத்தக் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

கிழக்குப் பல்கலைக்கழக விபுலானந்த நுண்கலைப் பீட அனுமதிக்கான நேர்முகப் பரீட்சையை யாழ்ப்பாணத்தில் நடத்துமாறு யாழ்.அரச அதிபர் க.கணேஷ் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

விபுலானந்த நுண்கலைப்பீட அனுமதிக்கான நேர்முகப் பரீட்சை கிழக்குப் பல்கலைக் கழகத்தில் எதிர்வரும் 9 ஆம் திகதி நடைபெறுவதற்கு ஏற்பாடாகியிருந்தது.


தற்போதைய போக்குவரத்து வசதியின்மை காரணமாக மேற்கூறிய நேர்முகப் பரீட்சையை யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த 241 விண்ணப்பதாரிகளுக்கு யாழ்.மாவட்டத்திலேயே நடத்துவதற்கு அரசாங்க அதிபர் அனுமதி கோரியுள்ள்ளார். (ச)

## மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி பழங்கிணற்றடி ஸ்ரீ வீரகத்திவிநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று காலை 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

தொடர்ந்து எதிர்வரும் 15 ஆம் திகதி சப்பறத்திருவிழாவும் மறுநாள் தேர்த்திருவிழாவும் நடைபெறும். 17 ஆம் திகதி தீர்த்தோற்சவம் நடைபெறும். (ச)




*யுத்தம் செய்யப் புனிதமான வழி முறைகள் இல்லை*


'வடக்கும் கிழக்கும் தெற்கும் மேற்கும் ஒரே கொடியின் நிழலில்' என்று சிங்களப் பாடகர் சுனில் சாந்த பாடினார். பாடலில் கூட வடக்கும் கிழக்கும் இணைந்திருப்பதைப் பொறுத்துக் கொள்ளாதவர்கள் அதனை 'தெற்கும் கிழக்கும் வடக்கும் மேற்கும்' என்று விலக்கி வைக்க முயன்றனர்.

அரசாங்கம் உத்தியோக பூர்வமாக அறிவிக்காவிட்டாலும் நீதி

அதேபோல அரசியல் நலன்களுக்கேற்ப யுத்த உபாயங்களை திட்டமிடுதல், பெனடோல் தொடக்கம் மோட்டார் வரை கமிஷனை விழுங்கும் தேவையிருத்தல் என பதற்காக மட்டும் யுத்தம் முன்னெடுக்கப்படுமாயின் அவ்வாறான யுத்தம் அர்த்தமற்றது என்று மாலிந்த குறிப்பிடுகின்றார். இந்த யுத்த நடவடிக்கையினால் பொதுமக்கள் கொல்லப்படுவதை அவர் இவ்வாறு கருதுகின்றார்.

'மக்கள் சாகின்றார்கள் தான். அவற்றையெல்லாம் யோசித்துக

சமூகச் செயற்பாட்டாளர் இந்த யுத்த நடவடிக்கையை முன்னெடுத்துச் செல்வதனூடாக அடிப்படை



ஜயந்த செனவிரத்ன

சாரமும் பயணித்திருக்க வேண்டும். 1983ன் பின்னர் ஆயுத அரசியல துருவமயமயானது. வடக்கு கிழக்கு ஆயுத அரசியல் நடவடிககைகள் ஒரு புறம் துருவமயமாகும் போது அரச படைகளின் யுத்த அழைப்புக்கள் மறுபுறம் துருவமயமாகியது.

இநத இரு துருவமய நிலையையும் விளங்கி கொண்டு அவற்றுக்கு அப்பால் அல்லது நடுவில் பரந்தளவிலான அரசியல் கலாசாரம் ஒன்றைக் கட்டியெழுப்பியிருக்க வேண்டும். இவ்வாறான

மையாக அடக்கி ஒடுக்கலாம் என்று அரசாங்கம் எண்ணினாலும் இப் பிரச்சினை வேறு இடத்தில் வேறு வடிவத்தில் தோன்றுவதை எவராலும் தடுத்துவிட முடியாது. இவ்வாறே 23 வருட காலமாக இந்த யுத்தம் நீடித்துக் கொண்டிருக்கின்றது. தற்போதைய யுத்த நடவடிக்கையின் நோக்கம் வடக்கிலிருந்து கிழக்கை வேறுபடுத்தலாகும்.

இது தான் பெரிய பிரச்சினையாகும். வடக்கிலிருந்து கிழக்கை எவ்வாறு பிரிக்க முடியும் அவ் வாறு

# யுத்த முனைப்புகள் - தெற்கின் கருத்துகள்



மாலிந்த செனவிரத்ன

மன்றத் தீர்ப்பின்படி வடக்கு கிழக்கு பிரிப்பினை யதார்த்தமாக்கும் நடவடிக்கையில் அரசாங்கம் ஈடுபடுகினறது. கிழக்கில் தற்போதைய யுத்த நடவடிக்கை தொடாபாக தென் பகுதியின் கருத்துக்களை ஆராயும் போது தி நேஷன் பத்திரிகையின் துணை ஆசிரியர் மாலிந்த செனவிரத்னவை சந்திக்க நேர்ந்தது.

'யுத்தம் இல்லாத சூழ்நிலை இருந்தால் நன்று. ஆனால் நாம் விரும்பும் கற்பனாவாதங்களை அடைவது கடினமானதே. அவை யதார்த்தமற்றவை.' அவரின கருததுக்களின் ஆரம்பம் இவ்வாறு இருந்தது. அவரின் கருத்தின்படி, இந்த நாட்டில் பயங்கரவாதம்உள்ளது.

இந்த நிலை நாட்டின் தேசிய பாதுகாப்புக்கு பெரும் அச்சுறுத்தலாக அமைகின்றது. இதனால் இந்த பயங்கரவாதத்திற்கு எதிராக அரசு என்ற வகையில் முன்னெடுக்க பல நடவடிக்கைகள் உள்ளன.

'யுத்தத்தை சரியாகச் செய்கின்றார்களா இல்லையா என்பது வேறு விடயமாகும். ஆனால் யுத்தம் ஒன்றை நடத்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. விடுதலைப் புலிகள் 2002ம் ஆண்டை விட தற்போது சர்வதேச ரீதியிலும், இராணுவ ரீதியிலும், கருத்து நிலையிலும் மிகவும் பலவீனமான நிலையில் உள்ளனர். இது அரசுக்கு சாா்பான நிலைமை. அதனால் கிழக்கை மீட்டெடுப்பது மிக அவசியமாகும்.

கருத்து ரீதியிலான தாயகக் கோட்பாடு என்ற விடயம் இதனுடன் முடிவுக்கு வரும். நீதிமன்ற தீர்ப்புகளும், யுத்த நடவடிக்கை மூலம பெறப்படும் வெற்றிகளும் போதுமானதல்ல.


புலிகளின் ஆக்கிரமிப்பில் இருந்து விடுவிக்கப்படும் தமிழ், முஸ்லிம் மக்களும் எமது மக்களே என்ற சிந்தனை நமக்குள் ஊடுருவ வேண்டும். கிழக்கை விடுவிக்க எடுக்கப்படும் இராணுவ நடவடிக்கையினூடாக அங்கு வாழும் மக்களின் வாழ்க்கை தரத்தில் சிறப்பான மாற்றங்களை ஏற்படுத்தும் வகையில் திட்டமொன்றை அமுல்படுத்த வேண்டும'.

எனினும் அரசாங்கத்திடம் அவ்வாறான திட்டங்கள் எதுவுமே இல்லை என்பது மாலிந்தவின் கருததாகும்.

கொண்டு யுத்தம் செய்ய முடியாது. நாட்டைக் கொடுத்துவிடவா கூறுகின்றீர்கள். அவை துன்பகரமான சம்பவங்கள். இவ்வாறான சம்பவங்களைக் குறைக்க முயற்சிக்க வேண்டும். பாதிப்புக்கள் இன்றி யுத்தம் செய்யக் கூடிய புனிதமான வழிமுறைகள் இல்லையே'.

*பேச்சுவார்த்தை மேசைக்கு வரவழைக்க மேற்கொள்ளும்அழுத்தமே இது*

சமாதான பேச்சுவார்த்தையை திசை திருப்ப முயன்ற ஐ.தே. கடசியின் ஆட்சிக் காலத்தில் நிலவிய யுத்த நிறுத்தத்தின் போது படையினரைத் தாக்கி, ஐ.தே.க.



பெல்லன்வில விமலரத்ன

வினர் பார்த்துக் கொணடிருக்கும் போதே மனிதப் படுகொலைகளை நிகழ்த்திய புலிகளின் இராணுவப் பலத்தைப் பலமிழக்கச் செய்து அவர்களைப் பேச்சுவார்த்தை மேசைக்கு வரவழைக்க மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டுள்ள ஓர் முயற்சியாகவே கிழக்கை மீட்டெடுக்கும் யுத்த நடவடிக்கையை கருதும் பேராசிரியர் பெல்லன்வில விமலரத்ன தேரர் இறுதியில் பேச்சுவார்த்தை மிக முக்கியமான வழி முறையா கும் என்கிறார்.

'நாட்டின் படையினர் என்ற வகையில் தமது முகாம்கள் அழிக்கப் படுவதையும், சக வீரர்கள் கொல்லப் படுவதையும் வெறுமனே படையினரால் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்க முடியாது. இவற்றுக்கெல்லாம் இதே வழிமுறையிலேயே பதில் கூற வேண்டும்.

சர்வதேச உதவிகளைப் பெறும் அரச சார்பற்ற நிறுவனங்ளைச் சேர்ந்தவர்கள் இவை தவறு என்றுக் கூச்சலிடுவார்கள். கூச்சலிடத் தானே அவர்களுக்கு உதவிகள் கிடைக்கின்றன. ஆனால் அரசாங்கத்தினால் அவ்வாறு முடியாது. பயங்கரவாதத்திற்கு [illegible]டை தேட வேண்டிய கட்டாயம் அர[illegible]கத்திற்கு ஏற்பட்டுள்ளது. ஆன[illegible] பொதுமக்களுக்கு ஏற்படும் பாதிப்புக்களைக் குறைக்கும் வகையிலேயே தாக்குதல்களை முன்னெடுக்க வேண்டும்'.

*பிரச்சினைகளை மேலும் மேலும் சிக்கல்படுத்[illegible]*

பேராசிரியர் ஜயந்த சென[illegible] யுதததிற்கு எதிரான கருத்து நிலையில் நின்று செயறபடும்

வாதிகளின் கைப்பொம்மையாக அரசாங்கம் செயறபட்டு வருகின்றது என்று அவர் கூறுகின்றார். தற்போது முன்னெடுக்கப்படும் அரசியல் திட்டங்களும் யுத்த திட்டங்கள் போன்று இந்த அடிபபடை வாதிகளின் யோசனைப்படியே என்பதால் நாட்டில் மிகவும் பயங்கரமான சூழல் உருவாகி வருவதாகவும் தெரிவிககின்றார்.

'இந்த நடவடிக்கைகள் இலக்குகளை நோக்கி முன்னெடுக்கப் படுவதல்ல. இத்தாக்குதல் நடவடிககைகள் அனைததும் சாதாரண பொதுமக்களின் மீது நடத்தப்படுகின்றன. இது மாபெரும் மனிதாபிமான பிரச்சினையாகும்.

இப்போது இந்த விவகாரங்கள சர்வதேசத் தரத்தல் பேசப்படும் விடயங்களாகிவிட்டன. அரசாங்கத்திற்கும் இந்த நிலைமை அபகீர்த்தியை ஏற்படுத்தும். யுத்த நடவடிக்கைகளைப் பற்றி மட்டுமே அரசாங்கம் சிந்தித்துக் கொண்டிருக்கின்றது. இதுதான் இனப் பரச்சினையைத் தீர்க்க ஒரே வழி என்றும் அரசு கருதுகின்றது. மறுபுறம் தமது மக்களை துன்புறுதத இடமளித்துவிட்டு விடுதலைப் புலிகள் அதனூடாக சர்வதேச கவனத்தைப் பெற முயற்சிக்கின்றனர்.

இதனால் அரசாங்கத்திற்கும் சர்வதேச பிரஜைகளுக்கும் இடையில் பெரும் கருத்து மோதல் நிலை ஏற்பட்டுள்ளது. அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படும் மனித உரிமை மீறலகளின் ஊடாக சர்வதேசப் பிரஜைகளின் அனுதாபத்தைப் பெறுவதே விடுதலைப் புலிகளின் நோக்கமாகும்' ஐரோப்பிய ஒன்றியத்தின் அடுத்த தலைமைத்துவம் ஜேர்மனிக்கு கிடைக்கின்றது. ஜேர்மன் நாடு புலிகளுக்கு எதிரான கடும் போக்கைக் கொண்ட நாடல்ல. இதனால், தற்போது நிலவும் புலிகள் மீதான தடையும் நீக்கப்படுவதற்கான வாய்ப்புகளும் அதிகமாக இருப்பதாக பேராசிரியர் ஜயந்த கூறுகின்றார்.

*யுத்தம் - தடுக்க முடியாத ஒரு தர்க்கம்*

கொழும்பு பல்கலைக்கத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் தம்ம திசாநாயக்க யுத்தத்திற்கு எதிரான மனிதாபிமான இயக்கம் ஒனறின் அவசியத்தை வலியுத்துகின்றார். இதன் மூலம் யுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் இரு தரப்பினரையும் பேச்சுவார்த்தை மேசைக்கு வரவழைக்க அழுத்தம் கொடுக்க முடியும் என்றும் அவர் கூறுகின்றார்.அவர் இவ்வாறு கூறுவதற்கான காரணத்தை பின்வருமாறு விளக்குகின்றார்.

'இனப்பிரச்சினை ஆயுத மோதலாக 1983ன் பின்னர் முன்னோக்கி[illegible] ஆரம்பித்த போது அதே வே[illegible]ர் எமது அரசியல் கலா



தம்ம திசாநாயக்க

நிலையில் மோதலைத் தீக்கும் அரசியல் போக்கு ஏற்பட வாய்ப்பு ஏற்பட்டிருக்கும். ஆனால் அப்படியான நிலைமை ஏற்படவில்லை. இதற்கு காரணம் யுத்த செயற்பாடுகள் அரசியலைவிட முக்கியத்துவம் பெறும் போது அதற்கு ஏற்ப இலங்கையின் சிவில் சமூகமும் ஏனைய சமூகங்களும் சரியான பிரதிபலிப்புகளை வெளிபபடுத்தாததே.

தற்போது இந்த துருவமயமாதல் நிகழ்வுகள் எவராலும தொட முடியாத அளவுக்கு உயர்ந்து உக்கிர நிலையை எய்தியுளளது. இதனால் யுத்தமும தவிர்க்க முடியாத தர்க்க நிலையாகி விட்டது. இந்த இயலாமைக்குள் இருந்து கொண்டு இரு தரப்பும் மேற்கொள்ளும் யுத்த நடவடிக்கைகளை நாம் விரும்பியோ விரும்பாமலோ அவதானித்துக் கொண்டு தீர்வு காண முயற்சிக்கின்றோம். இது மிகவும் மோசமான நிலையாகும்'.

*தீர்வும் பேச்சுவார்த்தையும் உடன்பாடும்*




ஹெரி குணதிலக்க

யுத்தம் வரலாற்றுடன் இணைந்த யதார்த்தமாக இருப்பினும் பிரச்சினைக்கு தீர்வல்ல என்று யுத்தம தொடர்பான அனுபவம் கொண்ட முன்னாள் விமானப்படை தளபதி எயார் வைஷ் மார்ஷல் ஹெரி குணதிலக்க கூறுகின்றார். பத்து வருடங்களுக்கு முன்னர் அவா கொண்டிருந்த இந்த நிலைப் பாட்டிலிருந்து அவர் தற்போதும் மாறவில்லை. யுத்தத்திற்கு ஒரே தீர்வு பேச்சுவார்த்தையும் அதனால் ஏற்படும் உடன்பாடும் மட்டுமே என்று அவர் கூறுகின்றார். விடுதலைப புலிகளினாலேயோ படையினராலேயோ யுத்தத்தல் வெற்றிகொள்ள முடியாது என்பதே அவரது கருத்தாக உள்ளது.

' புலிகள் இயக்கத்தினரை முழு

செய்யக் கூடாது என்று இந்தியப பிரதமர் மன்மோகன் சிங்கின் ஊடாக இந்தியாவின் நிலைப்பாடு வெளியாகியுள்ளது. இந்தியா இந்த விடயத்தில் எதிர்ப்பு காட்டினால் எம்மால் அவர்களுடன் மோதிக் கொள்ள முடியுமா?'

*வடக்குகிழக்குஇணைப்பை ஏற்றுக்கொள்ளுதல் கட்டாய நிபந்தனையாகும்*



ரணத் குமார சிங்கசே

சேகா தனது புத்தாண்டுச் செய்தியில 2007ம் ஆண்டில் பிரிவனைவாத சக்திகளை அழித்து தாய் நாட்டை விடுவிக்கப் போவதாக் கூறியிருப்பது மிகவும் தீர்க்கமான யுத்த அறிவிப்பு என்று புதிய இடது சாரி முன்னணியின கல்விச் செயலாளர் ரணத் குமாரசிங்கசே கூறுகின்றார்.

ஜனாதிபதியும் எதிர்க் கட்சித் தலைவரும் தமது புத்தாண்டுச் செய்தியில் சமாதானத்தை வலியுறுத்தியிருந்தாலும் புத்தாண்டு பிறந்த வேளை விமானத் தாக்குதலகளை நடத்தி பொது மக்களையும் சிறுவர்களையும் படுகொலை செய்ததே அவர்களுக்கு வழங்கப்பட்ட புத்தாண்டு பரிசா? என்று ரணத் கேள்வி எழுப்புகின்றார்.

'விடுதலைப் புலிகளை தோல்வியுறச் செய்வது தொடர்பாக அரசாங்கத்திற்கும் எதிர்க்கட்சிக்கும இடையில் தெளிவான இணக்கப்பாடு ஒன்று உண்டு.

ஆனால் புலிகள் இயக்கம் செவ்வாய் கிரகத்திலிருந்து வந்த இயக்கமல்லவே. தமிழ் விடுதலைப் போராட்டத்தின் பிரதான பேச்சாளராக புலிகள் இயக்கத்தினரே உள்ளனர்.

தொகுப்பு
மஞ்சுள வெடிவர்தன

அவர்களை தோற்கடிப்பது என்பது தமிழ் மக்களின் முதுகெலும்பை உடைக்கும் செயலாகும. முதுகெலும்பை உடைத்து விட்டு இவர்கள் விரும்பிய தீர்வினை அவர்கள் மீது திணிப்பதே அரசாங்கத்தின் நோக்கமாகும். பிரதேச ரீதியிலான அதிகாரப் பரவலாக்கலுக்கு தமிழ் மக்கள் ஒரு போதும் உடன்படமாட்டார்கள். உடன்படவும் முடியாது. வடக்கு கிழக்கு இணைப்பு யோசனையே முன்வைக்கப்பட வேண்டும'.



# தரிசனம்



# சர்வகட்சி மாநாடு இனப்பிரச்சினைக்கு தீர்வு தருமா?

"சர்வகட்சிமாநாடு" என்ற சொற்பதம் இலங்கையின் அரசியலில் மிகப்பெரும் அந்தஸ்தைப் பெற்றிருந்தது.

சர்வகட்சி மாநாட்டின் முடிவுகள் இனப்பிரச்சினைக்கான நிரந் தரத் தீர்வைத் தரும் என்ற நம்பிக்கை உச்சம் பெற்றிருந்த



மஹிந்த ராஜபக்ஷ

மையே அதற்கான காரணமாகும்.

இலங்கையில் அரசியல் கட்சிகளாகப் பதிவுசெய்யப்பட்ட அனைத்துக் கட்சிகளும் ஒன்றுகூடி, நாட்டின் முதன்மைப் பிரச்சினையாகவுள்ள இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் என்ற எண்ணப்பாடு மக்களிடையேஏற்பட்டமைநியாயமானதே.

எனினும் மக்களின் நியாயமான எண்ணப்பாட்டை இலங்கையில் கூடிய சர்வகட்சி மாநாடுகள் பெற் றுத் தரவில்லை. இதனால், "சர்வ கட்சி மாநாடு" என்று பேசினாலே முகத்தைச்சுழிக்கும்பரிதாப நிலையே காணப்படுகின்றது.

***ஜே.ஆரின் ஆட்சியில் கூடிய சர்வகட்சி மாநாடு***

நாட்டின் நிறைவேற்று அதிகாரம் பொருந்திய முதலாவது ஜனாதிபதியாக ஜே.ஆர்.ஜயவர்த்தனா இருந்தபோது, இனப்பிரச்சினைக் குத் தீர்வு காண்பதற்காக அன்று சர்வ கட்சி மாநாடு கூடியது.

இலங்கையின் அரசியல் புலத்தில் சர்வகட்சி மாநாடு என்ற சொற்பதம் பிரபல்யமும், முக்கியத்துவமும் பெற்றது இதன்போதே. அரசியல் கட்சிகளிலும், அரசியல்வாதிகளிலும் நம்பிக்கை கொண்ட மக்கள் சர்வகட்சி மாநாட்டின் முடிவுகள் இலங்கையில் நிரந்தர அமைதியையும், சமாதானத்தையும் தரும் என நம்பினர்.

10 தடவைகள் கூடிய சர்வ கட்சி மாநாட்டில் எந்த முடிவுகளுமே எடுக்க முடியாமல் போயிற்று. சமா



தானத்தீர்வு கிடைக்கும் என்ற ஆவலோடு காத்திருந்த மக்களுக்கு சர்வ கட்சி மாநாடு தந்த ஏமாற்றம் இனிமேலும் மாநாட்டின் பெயரை உச்சரிக்க வேண்டாமென்ற அளவிற்குக் கொண்டுபோய் விட்டது.

***ஜனாதிபதி மஹிந்தவின் சர்வகட்சி மாநாடு***

எல்லோரும் ஏறி விழுந்த குதிரையில் சக்கடத்தாரும் ஏறிச் சறுக்கி விழுந்தார்என்பதுதமிழ்ப்பழமொழி. இப்பழமொழியை நினைவு படுத்துவதாகவே, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின்ஏற்பாட்டில்தற் போது நடைபெற்று வரும் சர்வகட்சி மாநாட்டை தமிழ் மக்கள் கருதுகின்ற

னர்.

ஜே.ஆர்.ஜயவர்த்தனாவின் காலத்தில் கூடிய சர்வகட்சி மாநாடு என்ன முடிவைத் தந்ததுவோ, அதனையே ஜனாதிபதிமஹிந்த ராஜபக்ஷவின் சர்வகட்சி மாநாட்டின் முடிவுகளும் அமையும்என்றநினைப்பு தமிழ் மக்களிடம் மிக உறுதியாக

வுள்ளது.

அத்தகையதொரு நினைப்பு ஆரோக்கியமானதல்ல. ஜே.ஆர். ஜய வர்த்தனா ஜனாதிபதியாக இருந்த போது, கூட்டப்பட்ட சர்வ கட்சிமாநாடு, இனப்பிரச் சினைக்கான தீர்வைத் தரவில்லை என்பதற்காக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஏற்பாட்டில் நடைபெறும் சர்வகட்சி மாநாடு தீர்வைத் தரமாட்டாதெனக் கூறுவது ஏற்புடையதல்ல என்ற வாதம் பெரும்பான்மை இனமக்களிடையே நிலவுமாக இருந்தால் அதற்கான எதிர்வாதத்தை முன் வைப்பது தேவையானதே.

அவ்வகையில், ஜே.ஆரின் காலத்தில் நடைபெற்ற சர்வகட்சி மாநாட்டில் பங்குபற்றிய அதே அரசியல் கட்சிகளே ஜனாதிபதி மஹிந்தவின் தற்போதைய சர்வ கட்சி மாநாட்டிலும் பங்காளர்களாக உள்ளனர்.

அன்று சமாதானத்தின் அவசி



ஜே. ஆர். ஜயவர்த்தனா

யத்தை உணராதவர்கள் இன்று மட்டும் மனம் மாறிவிட்டார்களா? அல்லது இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது கட்டாயமானது என்ற மன விருப்போடு சர்வ கட்சி மாநாட்டில் கலந்து கொள்கிறார்களா? எது வுமே இல்லை.

அப்படியாயின், எப்படி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கூட்டியுள்ள சர்வ கட்சிமாநாடு, தமிழ்மக்கள்படும் அவலத்திற்கு முடிவு கட்டுமெனநம்பமுடியும். இதுதமிழ் மக்களின் ஒட்டுமொத்தமான கேள்வி.

***ஐ.தே.கட்சி என்ன செய்தது***

சர்வகட்சி மாநாட்டின் நோக்கம் ஒரு தேசிய பிரச்சினைக்கு அனைத்துக் கட்சிகளும் சேர்ந்து முடிவுகாண வேண்டும் என்ற நோக்கில் கூட்டப்படுவதாகும். எனினும் அந்த நோக்கம் இனப் பிரச்சினை தொடர்பில் இலங்கையில் கூட்டப்படும் சர்வகட்சி மாநாடுகளுக்கு இல்லை என்றே கூற

வேண்டும். மாறாக இலங்கையில் கூட்டப்படும் சர்வகட்சி மாநாடுகள் இரண்டு நோக்கை மையமாகக் கொண்டு கூட்டப்படுகின்றது.

அதில் ஒன்று சர்வகட்சி மாநாட்டைக் கூட்டுவதன் மூலம், நாட்டின் ஜனாதிபதியாக இருப்பவர் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் திறந்த மனத்துடன் செயற்படு கின்

றார். அவர் அனைத்துக்கட்சிகளினதும்ஒத்துழைப்பையும், அவர்களின் ஆதரவையும் வேண்டி நிற்கின்றார் என்பதை வெளிப்படுத்து தல்.

சர்வகட்சி மாநாட்டின் முடிவு எப் படிஅமையும்என்பதுபற்றிஆராயாத சர்வதேச சமூகம், இனப்பிரச் சினைக்குத் தீர்வைக் காண்ப தில் இலங்கை ஜனாதிபதி சர்வகட்சி மாநாட்டைக் கூட்டியுள்ளார் எனப் புகழாரம் சூட்டும்.

இந்த உண்மையைத் தெரிந்து கொண்ட அரச தலைவர்கள் சர்வ கட்சி மாநாடு என்ற போர்வையை போர்த்திக் கொண்டு சர்வதேசத்தின் அழுத்தத்தில் இருந்து தப்பித்துக் கொள்கின்றனர். இது ஒரு நோக்கம்.

மற்றையது இனப்பிரச்சினைக் குத் தீர்வு காண்பது போல காட்டிக் கொண்டு காலத்தைக் கடத்து வது. இதுவே கடந்த கால அனுபவத் தின் முடிவாகும்.

காலம் கடத்துவதில் இலங்கை அரசின் சாதனையை யாருமே முறியடித்துவிட முடியாது என்று பெருமை பேசுமளவிற்கு பல்வேறு சம்பவங்கள் நடந்தேறியுள்ளன.

அதில் ஒன்று சர்வகட்சி மாநாடாகும். இனப்பிரச் சினைக்குத் தீர்வு காணும் விடயத்தில் ஓர் கால வரையறை இருந்தாக வேண்டும்.

காலம் கடத்தப்படும் ஒவ் வொரு கணப்பொழுதும் யுத்தத்தின் நகர்வு பன்மடங்கு வேகமெடுக் கின்றது என்ற உண்மையையும், ஒவ்வொரு கணப்பொழுதும் மனித உயிர்கள் இன மத பேதம் கடந்து அழிக்கப் படுகின்றன என்ற நிஜத் தையும் அரசியல் தலைவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

எனினும் துரதிஷ்டவசமாக, மக்கள் படும் அவலத்தை, அவர்கள் எதிர்கொண்டுள்ள பிரச்சினைகளைப் புரிந்துகொள்ளும் ஆற்றலும், மனநிலையும்நம்நாட்டுஅரசியல் தலைவர்களுக்கு இல்லாமல் போய்விட்டது.எப்படியும், எதுவும் பேசலாம். சிறுபான்மை இனத்தையும், அவர்கள் சார்ந்த மதத்தையும் தாக் கலாம் என்ற உணர்வு, இலங்கையின் அரசியல் தலைவர்களி டம் தாராள மாகவே உண்டு.

இதற்கு பாராளுமன்றத்தின் நிகழ்வுகள் ஆதாரமாகவுள்ளன.

***அன்றுதொடக்கம் இன்றுவரை...***

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஏற்பாட்டில் தற்போது நடந்து வரும் சர்வகட்சி ஆலோசனைக் குழு, தீர்வுத் திட்டத்தை நெருங்கிச் செல்வதாகவும் சகல இன மக்களும் ஏற்றுக் கொள்ளக் கூடிய வகையில் தீர்வுத் திட்டம் தயாரிக்கப்படும் என்றும் அதன்

தலைவர் திஸ்ஸவிதாரண தெரிவித்துள்ளார். இலங்கை அரசியல் வரலாற்றில், திம்புப் பேச்சுவார்த்தை முதல் ஜெனீவாவில் இரண்டாவது தடவையாக நடந்த பேச்சுவார்த்தை வரை எல்லாமே வெற்றிதரும் என்றே கூறப் பட்டது.

ஆக, அந்த மரபை திஸ்ஸவிதாரண மட்டும் மீறுவது அவ்வளவு அழகல்ல என்பதால் சர்வகட்சி ஆலோசனைக் குழு வெற்றிகரமாக இறுதித் தீர்வுத் திட்டத்தைத் தயாரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது என்றவாறு அவரின் அறிக்கை அமைந்துள்ளது.

***சகல இன மக்களும் ஏற்றுக் கொள்ளும் தீர்வா***


சகல இன மக்களும் ஏற்றுக் கொள்ளும் தீர்வுத் திட்டமே சர்வ கட்சி ஆலோசனைக் குழுவினால் அமைக்கப்படும் என்பது திஸ்ஸ விதா ரண கூறுவதற்கு முன்பே தமிழ் மக்கள் சதா கேட்டுக் கேட்டுப் புளித் துப் போன விடயமாகும்.

தேர்தல் காலங்களில் அரசியல் மேடைகளில் வானதிர முழக்கமிடும் அரசியல்வாதிகள் நான்... எனது கட்சி... ஆட்சிக்கு வந்தால் சகல இன மக்களும் ஏற்றுக் கொள் ளும் தீர்வுத் திட்டத்தை முன் வைப் போம் என்று கூறுவதை தமது மூல மந்திர மாகக் கொண்டுள்ளனர்.

இங்குதான் ஒரு பெரும் பொய் அரங்கேறுகின்றது.

அதாவது, சகல இனமக்களும் ஏற்றுக் கொள்ளக்கூடிய தீர்வென் பது , பேச்சுக்குப் பொருத்தமான தேயன்றிய தார்த்தத்திற்குப்பொருத் தமானதல்ல. யதார்த் தத்திற்குப் பொருத்தமற்றதை பேசுவதால் பிரச்சினை மென்மேலும் சிக்கல் படுமேயன்றி அதனால் எந்த விமோசனமும் ஏற்படமாட்டாது.

எல்லா இன மக்களும் ஏற்றுக் கொள்ளக் கூடிய தீர்வென்பது, எதுவாகஇருக்கமுடியும். அதனை, எல்லா இன மக்களும் ஏற்றுக்



திஸ்ஸவிதாரண

கொள்கிறார்களா என்பதை அளவீடு செய்வது எப்படி? முன்வைக் கப்படும் ஒரு தீர்வுத் திட்டத்தை எல்லா இன மக்களும் ஏற்றுக் கொள் வார்கள் என எதிர்பார்க்க முடியுமா? என்பது அறிவியலாளர்களின் கேள்வி.

எல்லா இனமக்களும் ஏற் றுக் கொள்ளும் தீர்வுத் திட்டம் சாத்தியப் பாடானதெனில், இலங்கை மண்ணில் இத்துணை தூரம் இனப்பிரச்சினை வியாபகம் பெற்றிருக்க மாட்டாது. எனவே இங்கு எல்லோரும் ஏற்றுக் கொள்ளும் தீர்வுத் திட்டம் என்ப தற்கப்பால் சிறு பான்மை இன மக்கள் பெரும் பான்மை இனத்தி னர் அனு[illegible]க்கின்றஉரிமைகளையும், அதிகாரங் களையும் பெற் றுக் கொள்வதற் கான தீர்வுத் திட்டத்தையே முன் வைக்கவேண்டும். இலங்கைபௌத்த சிங்கள நாடு. இங்கு தமிழ் மக்கள் ஆளப் பட வேண் டியவர்கள். ஆள் வதும் அரசியல் யாப்பை ஆக்குவ தும் நாமே என்ற எண்ணக் கருத்து சிங்கள மக்களிடையே நீண்ட கால மாகப் புரை யோ டிப் போயுள்ளது. இந் நிலையில் சகல இனமக்களும் ஏற்றுக் கொள் ளக் கூடிய தீர்வென் பது சாத்தியமற்றதும் பொருத்த மற்றது மாகும்.

**ஆதித்தன்**

## தீ என்னைப் பாடச் சொல்லுகிறாய் !

எங்கள் வீதிகளில் தொங்கவிட்ட தோரணங்களின்
பசுமை இன்னும் தொடர்கிறது !
எங்கள் அன்னையரின் எழிலார்ந்த நெற்றிகளில்
குருதியில் குழைத்தமண் குங்குமம் இடுகிறது !
எங்கள் இளைஞர்கள் எண்ணிக்கை மாத்திரம்
எல்லா விதங்களிலும் இறங்கியே செல்கிறது !
விடியலின் பூபாளம் முகாரியாய் இசைக்கிறது ! - ஆனாலும்
நீ என்னைச் சனநாயகத்தைப் பாடச் சொல்லுகிறாய் !
குரல்வளை அறுக்கப்பட்ட சேவலைக் கூவச் சொல்லுகிறாய் !
காலொடித்த மயிலைக் களிநடம் ஆடச் சொல்லுகிறாய் ! (நீ என்னை)
சங்கக் கடைகளிலே மனிதம் சரிந்து கிடக்கிறது !
சகலதையும் இழந்து புதுச் சரித்திரம் படைக்கிறது !
அங்கிங் கெனாதபடி எங்கும் அழுகுரல்கள் !
அதற்கேற்ப ஆனந்தத் தாண்டவமும் நடக்கிறது !
கொலையே கலையான கொள்கை பரவுதால்
கொள்ளையும் வன்முறையும் கூட்டுறவாய் வளர்கிறது !
நேரசூசிப்படி நிகழ்ச்சி நிரல் அமைகிறது ! - ஆனாலும்
நீ என்னைச் சமாதானத்தைப் பாடச் சொல்லுகிறாய் !
நரம்பறுந்த யாழினிலே சுரங்கூட்டச் சொல்லுகிறாய் !
நாவிழந்த பேதையிடம் நாதம் பற்றிப் பேசுகிறாய் ! (நீ என்னை)
கறுத்தப் பூனையை இருட்டுக்குள் தேடுகின்ற
காரியம் இன்னும் முடியவே யில்லை !
கௌதமபுத்தரின் கருணையும் காருண்யமும்
கதைகளில் கூடக் காணக் கிடைக்கவில்லை !
சத்தியக் கல்லறைகள் எத்தனை தோண்டியும்
சமாதானச் சுவடுகளின் தரிசனம் கிட்டவில்லை !
கலப்படம் என்பது தாய்ப்பாலுக்கும் தாராளமாகிவிட்டது !
காலநதியினிலே மரணக்கரையும் கண்ணுக்குத் தெரிகிறது !
உயிர்மூச்சினிலும் அந்நிய வெம்மை உறைந்து கிடக்கிறது ! - ஆனாலும்
நீ என்னைச் சமத்துவத்தைப் பாடச் சொல்லுகிறாய் !
உணர்வுகள் அடங்கிய ஊமையைப் பாடச் சொல்லுகிறாய் !
உண்மையாய்த் தானோ ! நீ என்னைப் பாடச் சொல்லுகின்றாய் ! (நீ என்னை)

கலாநிதி ஏ.சி. திருநாவுக்கரசு



# தரிசனம்



# யுத்த முனைப்புகள் - வடக்கின் கருத்துகள்

வடபுலத்தில் தற்போது எழுந்துள்ள யுத்த முனைப்புகள் தொடர்பில் குடாநாட்டின் புத்திஜீவிகளையும், சமூக சேவையாளர்களையும் சந்திக்கும் தரிசனப்பயணம் இது. பயணத்தின் பாதை, ஏ-9 போல் மூடப்பட்டிருக் காவிடினும், கல்லும் முள்ளும், மேடும் பள்ளமும் நிறைந்ததென்பதைக் கூறித் தானாகவேண்டும்.

எது நடப்பினும் மௌனித்திருப்பதே அறிவின் அடையாளம் என்ற இலங்கைப் புத்திஜீவிகளின் கலாசாரமே நாட்டின் அவலநிலைக்குக் காரணம் என்ற அனுபவிப்போடு தரிசனப்பயணத்தை தொடங்கினோம். பயணத்தின் தரிசனத்தில் மானிடத்தின் அவலங்கள் - சோகங்கள் - சங்கக்கடைகளில் காத்திருக்கும் பரிதாபங்கள் கல்வித் தடைகள் எனப் பல் வகை அவதாரங்கள் வழிபாட்டுக்காகக் கிடைத்தன.

**போராயுதமாகப் பயன்படுத் தப்படும் அத்தியாவசியப் பொருட்கள்**

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் வரலாற்றுத்துறைத் தலைவரும் சிரேஷ்ட விரிவுரை யாளருமான பேராசிரியர் சத்தியசீலன் அவர்களைச் சந்தித்தோம். வட பகுதியில் தற்போது எழுந்துள்ள யுத்த நெருக்கடிகள் பற்றி அவருடன் உரையாடினோம். இலங்



எஸ். சத்தியசீலன்

கையின் வரலாற்று ஆய்வுத் தடத்தில் நீண்ட பட்டறிவுடைய பேராசிரியர் அவர்கள் இலங்கையின் இனப்பிரச்சினை குறித்து ஆக்க பூர்வமான கருத்துக்களை பொருத்தமான சூழ்நிலைகளில் தெரிவிப்பவர் .சமகால யுத்த முனைப்புகள் குறித்து விபரித்த அவர் , இதுவரை இல்லாதவாறு போராயுதமாக உணவு மற்றும் அத்தியாவசியப் பொருட்கள் பயன்படுத் தப்படுகின்றன. இதனைஉறுதிசெய்வதாக ஏ-9 பாதை மூடப்பட்டுள்ளது. இலங்கையில் இனப்பிரச்சினைக்கு ஒருபோதும் யுத்த நடவடிக்கைகள் மூலம் தீர்வு காணமுடியாது என் பதை கடந்த கால வரலாற்றில் இருந்து நாம் கண்டு கொள்ள முடியும்.

இவ்வாறு கருத்துக்கூறும் பேராசிரியர் சத்தியசீலன் அவர்கள் , தற்போது இலங்கையில் நடைபெறும் நிகழ்வுகள் . நாஜி ஜேர்மனியிலும் , பாஷிஷ இத்தாலியிலும் நடைபெற்ற சம்பவங்களையே ஞாபகப்படுத்துகின்றன என்கி றார்.

நாட்டில் மனிதப் பேரவலம் ஒன்று நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. புரிந்துணர்வு ஒப்பந்தம், போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு, ஐக்கிய நாடுகள் சபை நிறுவனங்கள், சர்வதேச அரசசார்பற்ற அமைப்புகள் எல்லாமுமே பொய்மையில்- வெறுமையில் இயங்கிக் கொண்டிருக்கின்றன. சர்வதேச சமூகம், இணைத்தலைமை நாடுகள், ஐரோப்பிய ஒன்றியம் என்பன இலங்கை விடயத்தில் தமது கையாலாகாத தன்மையை நிரூபித்துக் கொண்டுள்ளன. மனித நேயம், மனித கௌரவம், மனித விழுமியங்கள் அடிப்படையிலான அரசியல் நேர்மை எல்லாம் அழிந்து பொய்யும் புரட்டும், திருகுதாளமும் இலஞ்சமும் தலைவிதித்தாடுகின்றது.

**பேச்சுவார்த்தையில் அரசுக்கு நம்பிக்கை இல்லை**

இனப்பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும் என அரசு யதார்த்த பூர்வமாக செயற்பட வில்லை மனம் வைத்து செயற்



ஏ.கே. சிவசுப்பிரமணியம்

படுவதாக இருந்தால் அணுகுமுறை வித்தியாசமாக இருந்திருக்க வேண்டும். ஆனால் ஜனாதிபதி மஹிந்தராஜபக்ஷவின் கடந்த கால செயற்பாடுகளை நோக்கும் போது பிரச்சினைகளை ஏற்படுத்தி விட்டால் தாங்கள் நினைத்ததைச் சாதிக்கலாம் என நினைப்பது போல் தோன்றுகிறது. இது மனித நேய அமைப்புகளின் ஒன் றியச் செயலாளர் திரு.ஏ.கே.சிவசுப்பிர மணியம் அவர்களின் கருத்து.

தென்னிலங்கையில் இருந்து வருகின்ற அரச பிரதிநிதிகளையும் வெளிநாட்டு தூதுவர்களையும் சந்தித்து தமிழ் மக்களின் பிரச்சினைகளை எடுத்துக் கூறும் திரு.ஏ.கே.சிவசுப்பிரமணியம் அவர்கள் யுத்த அவலத்தின் போது சமூக தொண்டு ஆற்றிய அனுபம் உடையவர். தற்போது நாட்டில் குறிப்பாக வடபகுதியில் எழுந்துள்ள யுத்த சூழ்நிலை குறித்து அவருடன் கலந்துரையாடினோம்.

அவரின் அனுபவ பகிர்வுகள் பின்வருமாறு இருந்தன.

இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதில் தாம் அக்கறை கொண்டுள்ளதாக அரசு காட்டிக் கொண்டதெல்லாம் வெளி நாட்டு சமூகத்தின் மத்தியில், நாங்கள் நியாயமாக நடந்து கொள்வதாக வேஷம் போடும் நிகழ்வாகும். இது விடயத்தில் கடந்த கால அரசுகளை விட தற்போதைய அரசு மிக நுட்பமாக செயற்படுகின்றது. எவ்வளவு தான் பொருட்களைக் கொண்டு வந்தாலும் ஏ-9 பாதைமூடப்பட்டுள்ளமை மக்களைப்பாதிக்கும் செயல் என்ற உண்மையை அரசு ஏற்கத் தவறுகின்றது. யாழ். குடாநாட்டில் உணவுப்பொருட்களுக்கு பஞ்சம் இல்லை என அரசு அறிக்கை விட்டுள்ளது. அறிக்கைகள் வெளியிடுவதில் அக்கறை செலுத்தப்படும் அளவிற்கு அதில் உண்மைத்தன்மை இருக்க வேண்டும் என்பதில் கவனம் செலுத்தப்படுவதில்லை. அறிக்கைகளே தம்மைப் பாதுகாக்கும் என நினைத்து உண்மைக்கும் புறம்பான அறிக்கைகளை வெளியிடுவது குழப்பத்தையே உண்டு பண்ணுகிறது.

இலங்கையில் கடந்த யுத்த காலத்தை நோக்கினால் அரசு முதல், ஊடகங்கள் வரைவெளியிட்ட பொய்யான அறிக்கைகளும் தகவல்களுமே யுத்தம் முனைப்பு பெறுவதில் அதிக பங்காற்றியுள்ளது. கருத்தை சுதந்திரமாகச் சொல்ல முடியாததால் அவை அமிழ்ந்து போக வெளியில் வருகின்ற கருத்துக்களே உண்மையானதாகக் கொள்ளப்படுகின்றது. இனப்பிரச்சினையைத் தீர்க்கவேண்டும் என அரசு விசுவாசமாக முடிவெடுக்குமாயின் ஜே. வி.பி. , ஜாதிக ஹெல உறுமய போன்ற இனவாதக் கட்சிகள் ஓடுகின்ற நதியில் கரை ஒதுங் குகின்ற தும்புகள், தூசிகள் போல ஆகிவிடும் எனக்கூறும் சிவசுப்பிர மணியம் அவர்கள்,

**ஆட்சியாளர்களின் சிந்தனைச் சிறுமை மாறவேண்டும்**

மக்களை இன, மத, மொழி அடிப்படையில் வேறுபடுத்திப் பார்க்கும் கலாசாரம் இலங்கை அரசியலில் நீண்ட காலமாகவே இருந்துவந்துள்ளது.

தமிழ் மக்கள் ஆளப்படவேண்டியவர்கள் என்ற சிந்தனை தென்னிலங்கை அரசியல் புலத்தில் பரிணாம வளர்ச்சி கண்டதன் விளைவாகவே இனப்பிரச்சினைக்கு



அ. கோபாலகிருஷ்ணன்

தீர்வுகாண முற்படும் போதெல்லாம் குழப்பமும், யுத்தமும் மீண்டெழுகின்றது. இவ்வாறு கூறுகின்றார், மக்கள் வங்கியின் ஓய்வு பெற்ற முகாமையாளரும் சிறந்த நிர்வாகியுமான திரு.அ.கோபால கிருஷ்ணன் அவர்கள்.

வங்கியாளராக அரச சேவையில் இணைந்து கொண்ட திரு. அ.கோபாலகிருஷ்ணன் தென்னிலங்கையிலும் வடபுலத்திலும் கடமையாற்றியவர் . சிங்கள மக்கள் மிகவும் நல்லவர்கள் எனத் தனது பட்டறிவைப் பகிர்ந்துகொள்ளும் அவர் , இன வாத அரசியலை முன்வைத்து ஆட்சிப் பிழைப்பு நடத்துபவர்கள் . அவர்களைப்பிழையான பாதைக்குத் திசை திருப்பி விட்டதாகக் கூறுகின்றார்.

2002ஆம் ஆண்டில் அரசும் விடுதலைப்புலிகளும் செய்து கொண்ட யுத்த நிறுத்த உடன்படிக்கைக்குப் பின்னர் எல்லா இன மக்களும் நாட்டின் எல்லாத் திசைக்கும் பயமின்றி சென்றுவர முடிந்தது.


யுத்தநிறுத்த உடன்படிக்கைக் குப் பின்னர் சிங்கள மக்கள் ஏ-9 பாதையூடாக யாழ்ப்பாணத் திற்கு வருகை தந்ததையும், நல்லூர் முருகன் ஆலயத்திற்கு அவர்கள் வழிபடச் சென்றதையும் நினைவு படுத்தும் திரு.அ.கோபால கிருஷ்ணன்,

இந்நிலைமை ஏன் மாற்றமடைந்ததென்பதை அரசும், சிங் கள மக்களும் சற்று சிந்திக்க வேண்டுமெனவும் கேட்டுக் கொள் கிறார்.

பகைமை காட்டும் பாரம்பரியம் தமிழர்களின் பண்பாட்டில் இல்லை. இதனை யாழ்ப்பாணத் திற்கு வந்து சென்ற சிங்கள மக்கள் யதார்த்த பூர்வமாக உணர்ந் திருப்பர்.

**இருதரப்பும் தாராளமாக விட்டுக் கொடுக்க வேண்டும்**

ஒரு மொழி என்றால் இரு நாடு. இரு மொழி என்றால் ஒரு நாடு என்ற உண்மையை உரைத்த கலாநிதி கொல்வின் ஆர் . டி. சில்வாவின் கூற்றை நினைவு கூரும் திரு . நவரட்ணராஜா சிவ



ந. சிவகுமார்

குமார் பாடசாலை அதிபராக இருந்து ஓய்வு பெற்றவர். சிங் கப்பூர் கல்விச் சேவை நிறுவனத் தின் ஆலோசகராக கடமையாற் றும் அவர், கொல்வின் ஆர். டி. சில்வாவின் கருத்தை அன்றைய ஆட்சியாளர்களும் அதனைத் தொடர்ந்து வந்தவர்களும் அனுசரித்திருந்தால் நிலமை இத்துணை தூரம் மோசமடைந் திருக்காது என்கிறார்.

இப்போது யுத்தத்தின் கொடூரத்தை தனித்து தமிழ் மக்கள் மட்டுமன்றி சிங்கள, முஸ்லிம் மக்களும் அனுபவிக்கின்றனர். யாழ். குடாநாடு இராணுவக்கட் டுப்பாட்டிற்குள் இருப்பதாகக் கூறப் படுமாயின், மக்களைக் காப்பாற் றும் பொறுப்பு அரசினுடையதாகும்.

இராணுவத்தின் கட்டுப்பாட் டிற்குள் ஒரு பிரதேசம் - ஒரு குறித்த இனம் இருக்கிறது என்பதால் பெருமையடைய முடியாது. மாறாக, தனது கட்டுப்பாட்டிற்குள் இருக் கும் மக்களின் வாழ்வியல் எவ் வாறு அமைந்துள்ளதென்பதே இங்கு கவனிக்கப் படவேண்டிய தாகும். அவ்வகையில் யாழ். குடாநாட்டு மக்கள் யுத்தம், களவு, ஊரடங்கு, மனிதக்கடத்தல் என்ற அவலத்திற்குள் அகப்பட்டுள்ளனர்.

அரசு இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண முற்படுவதற்கப்பால், வட புலத்தில் இடம் பெறும் யுத்த மும், களவும் , உணவுப்பொருள் தட்டுப்பாடும் முதலில் நீங்க வேண்டும். பயப்பீதியற்ற வாழ்வை ஏற்படுத்திய பின்னரே மற்றவை பற்றி மக்கள் சிந் திக்க முடியும் என்பது திரு. சிவகுமார் அவர் களின் உறுதியான கருத்து.

கடந்த மூன்று தசாப்தங்களில் நடந்த இன வன்முறைகளின் பரிணாமங்களை அசைபோடும் அவர் , வாழ்க்கையின் பெரும் பகுதி கழிந்துவிட்டது இன்னமும் இனப் பிரச்சினை தீர்ந்தபாடில்லை என்ற வெறுப்பை வெளிக் காட்டுகின் றார்.

இந்திய அமைதிப்படை இலங் கைக்கு வந்த போது இனப்பிரச் சினைக்குத் தீர்வு கண்டிருக்க வேண்டும். அந்தச் சந்தர்ப்பம் தவறிய நிலையில் ஐ.நா. சபை யின் தலையீடே இனப்பிரச்சினைக் கான தீர்வை முன்வைக்கும் என் கிறார். சமாதான வழியில் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் சம்பந்தப்பட்ட இரு தரப்பும் தாராளமாக விட்டுக்கொடுக்க வேண்டியுள் ளது எனக் கூறும் அவர், யுத்தத்தின் மூலம் அழிவைத் தவிர தீர்வு ஒரு போதும் கிடையாதென அடித்துக் கூறுகின் றார்.

எந்த நாட்டிலும் தீவிரவாதக் கட்சிகள் இருக்கவே செய்யும். அவற்றையெல்லாம் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற தேவையில்லை. இந் நியதி ஜே.வி.பி., ஹெல உறுமய போன்றவற்றிற்கும் பொருந்தும் என்பது அவரின் கருத்து.

**போரிடும் மனநிலைக்கு உந்தும் கல்விப் பாதிப்பு**

வடபகுதி மாணவர்களின் கல்வியைப் பாதிக்கும் ஒவ்வொரு செயற்பாடும் மாணவர்கள் மத்தியிலும் பொதுமக்கள் மத்தியிலும் போரிடும் மனநிலையை வளர்ப் பதாக இருக்கும்.

இவ்வாறு தனது ஆய்வுச் சிந் தனையை வெளிப்படுத்துகின்றார் யாழ்ப்பாண பல்கலைக்கழகத் தின் பௌதிகவியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி சிவ யோகன் அவர்கள்.

யுத்த சூழ்நிலையால் தற்போது வடபகுதியிலும் குறிப்பாக யாழ். குடாநாட்டிலும் ஏற்பட்டுள்ள கல்



நா. சிவயோகன்

விப் பாதிப்பு குறித்த கண்ணோட் டத்தில் கருத்துத் தெரிவிக்கும் கலாநிதி சிவயோ கன் அவர்கள் ஏ-9 பாதை மூடப்பட்டதனால் ஏற் பட்டுள்ள அவலங்களை விலாவாரி யாக எடுத்துக் கூறினார்.

அவரின் கருத்தில்,

ஏ-9 பாதை கடந்த ஆகஸ்ட் மாதம் 11ஆம் திகதி மூடப்பட்டதி லிருந்து யாழ்ப்பாண மாவட்ட மாணவர்களின் கல்வி மிக மோச மாகப் பாதிக்கப்பட்டுள்ளது.இங்கு மாணவர்கள் என்று நான் குறிப் பிடுவது ஆரம்பப் பாடசாலை முதல் பல்கலைக்கழகம் வரை கல்வி கற்கும் அனைத்து மாணவர்களை யுமாகும்.

*தொகுப்பு*
*என். விஜயசுந்தரம்*

உதாரணமாக முன்பள்ளியில் கல்வி கற்றுக் கொண்டிருந்த எனது மகனுக்குக்கூட அப் பாடசாலையின் வழமையான நிகழ்வுகளான பரீட்சையோ, விளையாட்டுப் போட்டிகளோ அல்லது கலை, கலாசார நிகழ்வுகளோ நடாத்தப்படவில்லை. இதன் மூலம் மாணவர்களின் ஆளுமை விருத்தி முளையிலேயே கிள்ளி எறியப்பட்டுள்ளது.

இதேபோன்று 5ஆம் ஆண்டு புலமைப் பரீட்சையை எடுத்துக் கொண்டால் அதுவும் ஏ-9 பாதை மூடப்பட்டதால் பிற்போடப்பட்டது. முதலில் மாணவர்களை தயார்ப் படுத்தியபோது மீட்டல் வகுப்புகள், மாதிரிப் பரீட்சைகள் போன்றவற்றை ஆர்வமுடன் நடத்திய

(7ஆம் பக்கம் பார்க்க)




# தரிசனம்



# பெரும்பான்மையின் குழந்தையை அனாதையாக்கக்கூடாது

## சிறிதுங்க ஜயசூரிய - ஐக்கிய சோசலிசக் கட்சி

ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட சர்வகட்சி மாநாட்டின் நிபுணர் குழுவினரால்



சிறிதுங்க ஜயசூரிய

வடக்கு நெருக்கடிக்கு தீர்வாக முன்வைக் கப்பட்ட யோசனை சில வாரங்களுக்கு முன்னர் ஊட கங்களில் வெளியிடப்பட்டது. இந்த யோசனைகள் தொடாபான தர்க்கங்கள் ஆரம்பிக்கப்பட்ட போதிலும் இந்த யோசனைகள் தொடாபான அரசின் உத்வேகமற்ற போக்கு காரணமாக அத் தர்க்கங்கள் சூடு பிடிக்கவில்லை.

யோசனைகளில் கைச்சாத திட்ட நிபுணர்களுக்கு கடமை ரீதியில் சில சிக்கல்கள் எழுந்துள்ளதாக அறியவந்துள்ளதுடன் அவர்கள் தமது யோசனைகள் தொடர்பில் பகிரங்கமாக கருத்துத் தெரிவிக்க மறுத்து வருகின்றனர். இதனால் பிறந்து சில நாட்களிலேயே இந்த யோசனைகள் தாய் தந்தையற்ற துரதருஷ்ட நிலையை எய்தியுள்ளது.

இந்த யோசனைகள் இனப்பிரச்சினை தொடர்பில் இதுவரை முன்வைக்கப்பட்ட யோசனைகளில் மிகச் சிறந்தது என்று கூறிவிட முடியாது. இனப்பிரச்சினை தொடர்பில் காலத்திற்கு காலம் முன்வைக்கப்பட்ட தீர்வுத்திட்டங்கள் பற்றி சிறந்த அனுபவம் எமக்கு உண்டு. சோசலிசவாதிகள என்ற வகையில் எமது நிலைப்பாடு இந்த யோசனைகளின் எல்லைகளுக்கு அபபால் பயணிக்கின்றது. அவவாறாயின் இந்த யோசனைகளை முககியத்துவம் வாய்ந்தது எனறும் தீர்வுக்கான அடிப்படை என்ற ரீதியில் இவற்றை கலந்துரையாடலுக்குட்படுத்த வேண்டும் என்றும் ஏன் நாம் கூறுகின்றோம்?

முதலாவதாக இந்த யோசனை முன்வைக்கப்பட்ட பின்னணியை ஆராய வேண்டும். அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் மிகவும் தீர்க்கமான மோசமான யுத்த நடவடிக் கைகளில் ஈடுபட்டு நாட்டில் இனவாத - யுத்தவாத - அடிப்படைவாத சக்திகளின் குரல்கள் பல மடைந்து அதிகாரப்பர வலாக்கல் அடிப் படையிலான அரசியல தர்வுக்கான கலந்துரையாடல்கள் மறக்கடிக்கப்பட்ட பின்னணியிலேயே இந்த யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. மறுபுறம் இந்த யோசனைகள் அரசாங்கத்தின் ஊடாக நாட்டின் நிறைவேற்று ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட குழுவின் ஊடாகவே முன்வைக்கப்பட்டுள்ளது. அதன் உள்ளடக்கத்தை முழுமையாக ஆராய்ந்தால் போலியற்ற அதிகாரப் பரவலாக்கலுக்கான நேர்மையான ஆரம்பம் ஒன்று இருப்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும். ஜனாதிபதியினதும் அவரை அந்த பதவியில் அமர்த்திய சக்திகளின் நிலைப்பாடுகள் அதிகாரப் பரவலாக்கலுக்கு முரணானது என்று பிரபலமாகியுள்ள நிலையிலும் அவர்கள் இவ்வாறான நடவடிக்கையை துணிச்சலாக மேற்கொண்டமை பாராட்டுதற் குரியதாகும்.

உளளடக்கத்தை நோக்கினாலும் முக்கியமான பல யோசனைகள் இதில் உள்ளன. வடக்கு மற்றும் கிழக்கு ஆகிய இரு பிராந்தியங்களை பத்தாணடுகளுக்கு இணைக்க வேண்டும் என்பது இதில் முக்கியமானதாகும். ஜே.வி.பியின் மனுவை பரிசீலித்த பின்னர் வடக்கு கிழக்கு பிரிப்பு தொடாபான உயர்நீதிமன்ற தீர்ப்பு வெளியாகியுள்ள பின்னணியிலும், ஜனாதிபதியினால் கிழக்கு பிராந்தியத்திற்கென ஆளுநர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ள நிலையிலும் இந்த யோசனைகள் வெளியாகயுளளன.

மேற் கூறப்பட்ட வழக்கு விசாரணையில் ஒரு தரப்பாக தொடர்புறுவதற்கு ஐக்கிய சோசலிசக்கட்சி யாக எமக்கு வாய்ப்பளிக்கக் கோரிய போதிலும, கருத்து தெரிவிக்க மட்டுமே சந்தர்ப்பம் கிடைத்தது. இந்த விடயம் நீதிமன்ற விவகாரம் அல்ல அரசியல் பிரசசினை என்பதால் நீதிமன்றம் தலையிடாது அதனை அரசியல் ரீதியாக தீர்த்துக் கொள்ள இடமளிக்குமாறு நாம் கேட்டுக் கொண்டோம். எனினும் துரதிருஷ்டவசமாக ஜே. வி.பி கோரிய தீர்ப்பே உறுதியானது.

இந்த யோசனையானது வட பகுதி தமிழ் மக்களின் பிரச்சினை குறித்து மட்டுமன்றி கிழககு முஸ்லிம் மக்கள் மற்றும் மலையக மக்களின் பிரசசினைகள் குறித்தும் முக்கிய அவதானத்தைச் செலுத் தியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். தமிழ் முஸ்லிம் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் உப ஜனாதிபதி பதவிகள் இரண்டு உருவாக்கப்பட வேண்டும் என யோசனையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிழக்கு முஸ்லிம் மக்களினதும் மலையகத் தமிழர்களினதும் உரிமைகள் மற்றும் அடையாளத்தை ஏற்றுக் கொண்டு அவர்களுக்கு பிராந்திய ரீதியிலான நிர்வாக அதிகாரத்தை வழங்கு வதனை பிரேரித்துள்ளது.

இது மலையக மக்களினதும், முஸ்லிம் மக்களினதும் பிரச்சனை எதிர்காலத்தில் மோசமான நெருககடியை உருவாக்கக் கூடிய விடயம் என்பதால் அந்த மக்களின் உதவியுடன்




முன்னரேயே அமைதியாக இப் பரச்சினைக்கு தீர்வுகாண மேற கொள்ளும் முயற்சயாக இதனை கருதலாம்.

இந்த யோசனைகளை புலிகள் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள் என்ற கற்பனையின் அடிப்படையில் இவ்விடயத்தை கலநதுரையாடலுக் குட்படுத்தாமல புறக்கணிக்கப்படுவது தொடர்பாகவும் சில விடயங்களைக் கூற வேண்டியுள்ளது.

புலிகளின் விருப்பமோ விருப்பமின்மையோ இங்கு முக்கியமலல. அதிகாரப் பரவலாக்கலை அடிப்படையாகக் கொண்ட இவ்வாறான வேலைத்திட்டம் தொடாபாக தெற்கின் பரந்தள விலான இணக்கப்பாட்டை ஏற்படுத்த முடியுமா? என்பதே இங்கு பிரசசினையாகும்.

அவ்வாறன இணக்கப்பாட்டை ஏற்படுத்த முடியுமாயின் புலிகளை இணங்கச் செய்வது அடுத்தகட்ட நடவடிக்கையாகவே அமையும். அதனால் இந்த யோசனைகளின் அடிப்படையில் அரசியல் தீர்வுகாண உடனடி நடவடிக்கைகளை எடுக்குமாறு ஜனாதிபதி உள்ளிட்ட அரசாங்கத்திற்கு அழுததம் வழங்க, நீதியான அரசியல தீர்வுகாண முன்னிற்கும் அதேவேளை, சமாதானத்தையும் ஜனநாயகத்தையும் மதிக்கும் யுத்ததிற்கு எதிராக செயற்படும் அனைத்து தரபபினரினதும் பொறுப்பாகும்.

# சர்வகட்சி மாநாடு



குறிப்பு:-

'தரிசனம்' - தமிழ் சிங்கள கலந்துரையாடல் 'ஒன்றைக் கட்டியெழுப்ப மேற்கொள்ளும் ஓர் முயற்சியாகும். இங்கு இரு பத்திரிகைகளும் ஒரே விடயத்தை வெவ்வேறு கோணங்களில் அலசி ஆராய்கின்றன.

இந்த விடயங்கள் சிங்கள மொழியில் ராவய பத்திரிகையிலும் தமிழ் மொழியில் வலமபுரி பத்திரிகையிலும் பிரசுரமாகின்றது. ஓர் குறிப்பிட்ட விடயம் தொடர்பான சிங்கள மக்களினதும் தமிழ் மக்களினதும் எண்ணங்களை கருத்துக்களை பரஸ்பரம் இரு தரப்பினரும் அறிந்துக் கொள்ள வழிவகுப்பதே இதன் நோக்கமாகும்.

சிங்களவர்களுக்கு தமக்கென தேசிய வீரர்கள் இருக்கின்றனர். ஆனால் தமிழ் முஸ்லிம் மக்களின் வீரர்கள் யார் என்பதை சிங்கள மககள் அறியாதுள்ளனர். மறுபுறம் எமது தேசிய வீரர்கள் குறித்து அவர்கள் என்ன கருதுகின்றார்கள் என்பது குறித்து நாம் அறிந்திலம். பொது மக்களின் அக்கறையினை ஈர்க்கும் இவ்வாறான விடயங்களை கலந்துரையாடுவதனால் இனக்குழுமங்களுக் கிடையில் நிலவும் புரிந்துணர்வினை மேம்படுத்துவதே இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் நோக்கம் எனலாம். இந்த பக்கத்தை வாசிக்கும் வாசகர்கள் தமது அபிப்பிராயங்களை அறியத் தருவதன் ஊடாக இனக் குழுமங்களுக்கிடையில் நிகழ்த்தப்படும் இந்த கலந்துரையாடலில் பங்குபற்ற முடியும்

உங்களது கருத்துக்களை எழுதி அனுப்புங்கள்.

*"யாழ்ப்பாணத்தைக் கைப் பற்றிய போது நாம் சகல வற்றையும் இழந்தோம். மீண்டும் வீட்டைச் சென்றுப் பார்த்த போது எனது மிருதங்கம் அங்கு இல்லை"*

*(சிந்துஜா ரங்கநாதன்: இந்து பெண்கள் கல்லூரியின் 15 வயது மாணவி)*

# சிந்துஜாவின் மிருதங்கம்

*நீலச் சட்டை அணிந்திருந்த*
*பொல்லாத கள்வர்கள்*
*எம்மை விரட்டியடித்தனர்.*
*கைகளைக் கட்டி*
*அடித்துத் துன்புறுத்தி*
*கீழே தள்ளி விட்டு*
*களவாடிச் சென்ற*
*எனது மிருதங்கத்தை*
*நான் தேடி செல்கிறேன்.*
*முருகன் கோயில் மண்டபத்தில்*
*மண் துகள்கள் கூட அசைந்தாடின.*
*பனை மரங்கள் சற்றே குனிந்து*
*செவிமடுத்தன.*
*ஊர்வலத்தில் செல்லும்*
*எனது மிருதங்கம்*
*கிணற்றின் ஆழத்தினை*
*சேற்று நீரின் கண்ணீரினை*
*அப்பாவின் நெற்றியில்*
*திருநீற்றைத் துடைத்து விடும் வியர்வையினை*
*பூக்களின் நறுமணத்தை அறிந்த*
*எனது மிருதங்கத்தை*
*பலாத்காரமாக*
*எடுத்துச் சென்றனர்.*
*நீங்கள் எங்கே மறைத்து வைத்தாலும்*
*அது கோபத்தில் குமுறியழும்.*
*அது கதறியழும் போதும்*
*பாடல் பாடுவதாக*
*பொல்லாத கள்வர்கள் கூறுவார்கள்.*
*கழுத்தை நெரித்து*
*பாடலைப் பறித்தெடுக்க*
*எவராலும் முடியாது*
*மீண்டும் தூரவிட்டால்*
*எனது மிருதங்கம் ஊமையாகிவிடும்.*
*எனது இதயம் மௌனமாகிவிடும்.*

அனுர கே.எதிரிசூரிய
('நிஷப்த' என்ற நூலில் இருந்து)

போரி நடத்துவதில் பெருமையில்லை. பூசல் அகன்று மன மொத்த சமரசம் செய்வதில்தான் பெருமை.

-டாக்டர் இராதாகிருஷ்ணன்

வலம்புரி

## இனப்பிரச்சினைத் தீர்வில் எதிர்க்கட்சிகளின் ஆதரவு தேவை

நாட்டில் நீண்ட காலமாகப் புரையோடியுள்ள இனப்பிரச்சினைக்கு சமாதான வழியில் தீர்வு காணப் பட வேண்டும் என்ற சிந்தனை இன்னமும் கெட்டுப் போகவில்லை.

அழகிய இலங்கைத் தீவில் எல்லா இன மக்களும் சம உரிமை பெற்று சகோதரத்துவ உறவுடன் வாழவேண்டும் என்பது அநேகமானோரின் பெரு விருப்பாகும்.

எனினும் அரசியல்வாதிகளின் சுயநலமும், மதவாதிகளின் குறுகிய மனப்பாங்கும் இலங்கை மண் மானிடத்தின் குருதியில் நனைந்து போகின்றது.

இந்தத் துயரத்தை தடுப்பார் யாருமின்றி, நீண்டு செல்வது வேதனைக்குரியதாகும். இனப் பிரச்சினையின் வெளிப்பாடுகள், நாடு சுதந்திர மடைந்த காலப் பகுதியில் இருந்து ஏற்பட்டு வந்துள்ளதாயினும், போர் மூட்டம் கடந்து மூன்று தசாப் தங்களாக பரிணாம வளர்ச்சி கண்டு வருகின்றது.

தமிழ்த் தலைவர்களின் அகிம்சை வழிப் போராட் டங்கள் நசுக்கப்பட்டமையும், அவர்களின் நியாய மான கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்டமையும் நாட்டில் போர் வெடிக்கக் காரணமாயிற்று.

காலத் திற்குக் காலம் சிங்கள அரசியல்வாதிக ளும், பௌத்த மதத்தலைவர்களும் போதித்த இன வாதத்தை உள்ளீர்த்த சிங்கள மக்கள் அதனை தமிழர்களுக்கு எதிரான தீப் பிளம்பாகக் கக்கினர்.

அந்த இன வாதத் தீயில் எரியுண்டுபோன தமிழர்களும் அவர்களுடைய உடைமைகளும் கொஞ்ச மல்ல. சிறுபான்மை இனம் என்ற ஒரே காரணத்திற் காக தமிழர்களுக்கு பெரும்பான்மை இனத்தால் இழைக்கப்பட்ட கொடூரம், இலங்கையின் வரலாற் றுப் பாதையில் இருக்கக் கூடிய மிகப் பெரும் வடுக்களாகும்.

இன யுத்தத்தின் உச்சம் 83ல் ஜூலைக் கலவர மாக வெடித்த பின்னர், தமிழர்களின் பிரச்சினைக்கு தீர்வு காணப்படவேண்டும் என்பது பேச்சளவில் ஏற்பட்டதெனலாம். இலங்கையில் இனப்பிரச்சி னை இல்லை. இங்கு பயங்கரவாதமே உண்டு என்ற கருத்தியலில் இருந்து சிங்களத் தலைவர் விடுபடு வதற்கே பல ஆண்டுகள் எடுத்தன.

அதேநேரம், இனப்பிரச்சினைக்கான தீர்வுத் திட்டத்தை ஆளும் தரப்பு முன்வைக்கின்ற போதெல் லாம் அதனை எதிர்க் கட்சிகள் எதிர்த்தன.

இந்நிகழ்வு இலங்கைப் பாராளுமன்றில் மாறி மாறி நிகழ்ந்தன. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியி னால் இனப் பிரச்சி னைக்கான தீர்வுத்திட்டம் முன் வைக்கப்பட்டால் அதனை ஐக்கிய தேசியக் கட்சி எதிர்ப்பதும், ஐக்கிய தேசியக் கட்சியினால் முன்வைக் கப்படும் அரசியல் தீர்வை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி எதிர்ப்பதும் இலங்கை பாராளுமன்றத்தின் மரபாக இருந்தது.

தற்போது பொது இணக்கப்பாடு கண்டிருந்த சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் ஐக்கிய தேசியக் கட்சி யும் தமது இணக்கப்பாட்டை முடிபுறுத்திக் கொண் டமை வேதனையான நிகழ்வாகும்.

எதுவாயினும், ஆளும் கட்சியும் எதிர்க் கட்சிக ளும் இணைகின்றபோதே இனப்பிரச்சினைக்கான தீர்வு சாத்தியமாகும் என்பது நிதர்சனமான உண் மையாகும்.

# யுத்த முனைப்புகள் - வடக்கின் கருத்துகள்

(4ஆம் பக்கத் தொடர்ச்சி)

## போராயுதமாகப் பயன்படுத்தப்படும்....

வரலாறு நித்தம் நித்தம் படிப்பினைகளை தந்து கொண்டே இருக்கின்றது. அவற்றிலிருந்து சம்பந்தப்பட்ட எவருமே எவற்றையும் கற்றுக்கொண்டதாகத் தெரி யவில் லை என ஆதங்கப்படும் பேராசிரியர், உலகின் முக்கி யமான பிரச்சினை கள் பேச்சுவார்த்தைகள் மூலமாக - பிரச் சினை யின் அடிப்படையில் விட்டுக் கொடுப்புகளுடன் தீர்த்து வைக் கப்பட்டுள்ளன.

உலக வரலாற்றில் இராணுவ மேலா திக்கத்தை தக்க வைத்துக்கொண்டு எந்தப் பிரச்சினையையும் நிதானமாக தீர்த்து வைப்பதற்கான உதாரணங்கள் இல்லை என்றே கூற வேண்டும்.

இந்த அழகிய நாட்டை அரசியல்வா திகளும், ஆயுத பாணி களும், இராணுவ மேலாதிக்கவாதிகளும் தம் சொந்த நலன்களை முதன் மைப்படுத்தி விளைவுகள் பற்றி சற்றும் சிந்தியாமல் நாசம் செய்து கொண்டே போகிறார்கள்.

இலங்கைத்தீவின் வடக்குக் கிழக்கில் வாழும் குடிமக் களின் அரசியல், பொருளாதார, சமூக நலன்களில் அக் கறையின்றி, சிங்கள அரசியல்வாதிகள் தமிழர் பிரச்சினை களை தம் அரசியல் அதி காரத்தை தக்க வைத்துக் கொள்வ தற்காக பயன்படுத்தும் வரை இந்த நாட்டுக்கு விடிவு இல்லை என்றே கூற வேண் டும் என்பது அவரின் தீர்க்கமான முடிபு.

அதேநேரம் மானிடத்தின் வாழ்வியல் பற்றியும் அதன் தத்துவம் பற்றியும் குறிப்பிடும் பேராசிரியர் அவர்கள் இவ் வுலகில் மனித வாழ்வு மிகக் குறுகிய காலமே இடம் பெறுகின்றது.

அந்தக் குறுகிய காலத்துள் நிம்மதியாக, மகிழ்வாக, அமை தியாக தத் தம் உறவினர்கள், அயலவர்கள், நண்பர்கள் என்று பல்லின சமூகத்துடன் ஒன்றிணைந்து நல்வாழ்வை வாழ்வ தற்கான சூழலை விருத்திசெய்ய அனைவரும் முன் வர வேண் டும். அசோகர் பெற்ற படிப்பினையும் போதி மாத வன் பெற்ற அனுபவமும் இதைத்தானே நமக்கு உணர்த்து கின்றன.

## ஆட்சியாளர்களின் சிந்தனை...

எனினும், தென்னிலங்கை அரசியல் வாதிகளின் சிந் தனை இன்னமும் குறுகியதாகவே இருக்கின்றது. ஐக்கி யம், சமாதானம், மகிழ்வான வாழ்வு இவற்றையே நாட்டு மக்கள் வரவேற்கின்றனர்.

ஆனால் பேரினவாத சிந்தனையில் மூழ்கியிருப்பவர் கள் ஆட்சியை கைப்பற்றுவதிலும், பதவியைத்தக்கவைப்பதிலும் கவனம் செலுத்துவதிலேயே காலத்தைக் கழிக் கின்றனர்.

அவர்களுக்கு நாட்டின் அபிவிருத் தியில் - மக்க ளின் வாழ்வாதாரங் களில் அக்கறையில்லை, காலில் ஏற் பட்ட காயத்திற்கு, கண்ணில் சிகிச்சையளிக்கும் நடவடிக் கையே இலங்கை இனப்பிரச்சினை விடயத் தில் நடக் கின்றது.

யாழ்ப் பாணக் குடாநாட்டு மக்கள் படும் அவலங்க ளை, மறந்து - மறைத்து குடாநாட்டில் பொருட்களுக்குத் தட்டுப்பாடு இல்லை எனக் கூறுவது எவ்வகையிலும் நியா யமாகாது.

பாலுக்கும், பல்துலக்கும் தூரிகைக்கும் அலைகின்ற மக்களிடையே அரசின் அறிக்கைகள் எத்தனை தாக்கத்தை ஏற்படுத்தும் என்ற சிந்தனை சிந்தனையை உருவாக் குபவர்களிடம் இருக்க வேண்டும். தமிழ் மக்கள் வேறு, அரசு வேறு என்ற எண்ணப் பாடே யாழ். குடாநாட்டின் அவலத்திற்குக் காரணம் எனக் கூறும் அவரின் முடிவுரை,

யுத்த முனைப்புகளுக்குள் வாழ்கின்ற வடக்கு-கிழக்கு மக்கள் நிரந்தரமான சமாதானத்தை அனுபவிக்க வேண் டுமாயின் ஆட்சியாளர்களின் சிந்தனையில் உள்ள சிறு மைத் தனங்கள் விலக வேண்டும் என்பதாகும்.

## பேச்சுவார்த்தையில்...

தென்பகுதி மக்கள் அனுபவிக்கின்ற உரிமைகளை எமக்கும் தாருங்கள் என்பதே தமிழ் மக்களின் கோரிக் கைக ளாகும். இதைவிட வேறு எதனையும் தமிழ் மக்கள் கேட்க வில்லை. நியாயமாகச் செயற்படும் உங்கள் மக்களில் பெரும் பாலானவர்கள் இதனை ஏற்றுக்கொள் கின்றனர்.

எனினும் அவர்களின் நியாயமான கருத்துக்கள் அடக் கப்பட்டுள்ளன என்கிறார். தற்போதைய சூழ் நிலையைநோக் கும் போது பேச்சுவார்த்தையில் அரசுக்கு நம்பிக்கை யில்லை என்றே சொல்லத் தோன்றுகின்றது.

பேச்சுக்களில் நம்பிக்கை இருக்கு மாயின் பொறுப் புள்ள ஒரு அரசு அதற்கான சூழலை ஏற்படுத்தியிருக்க வேண்டும்.

அடிப்படைப் பிரச்சினைக்குத் தீர்வு காணாமல் இனப் பிரச்சினையை தீர்க்க முடியாது. ஒரே நாட்டிற்குள் பிரச்சி னைக்குத் தீர்வு காண்பதாக இருந்தால் வடக்குக் கிழக்கு இணைந்திருப்பதால் எந்தப் பிழையும் இருக்கமுடியாது. தமி ழர்கள் சிங்களவர்களின் எதிரிகளாகக் காட்டப்படுகின்றனர்.

இதனால் நிலைமை மோசமாகின்றது. உண்மையில் தமிழர்கள் சிங்களவர்களின் எதிரிகள் இல்லை. எந்த நாடு தலையிட் டாலும் இனப்பிரச்சினை இருக்கவே செய் யும். நாடுகளின் தலையீடு இருக்கவே செய்யும் என்ப தற்கு அப்பால் யுத்தத்தில் ஈடு பட்டுள்ள இரு தரப்புக்கும் இடையே புரிந் துணர்வு ஏற்படவேண்டும்.

யுத்தநிறுத்த உடன்படிக்கையில் இரு தரப்பும் கைச் சாத்திட்டால் அதில் உள்ள சரத்துக்களை நடைமுறைப் படுத்த வேண்டும். அந்த எல்லைக்குள் நின்று பேசவேண்டும். பேசி யதை செயலுருப்படுத்த வேண்டும். இவை கட்டாயமானதாகும்.

எனினும், புரிந்துணர்வு உடன்படிக்கை யில் கூறப்பட்ட விடயங்களைநடை முறைப் படுத்துவதில் தென்னிலங் கை யில் ஒரு தெளிவான உடன்பாடு இருக்கவில்லை. இதன் விளைவுகளே இன்றைய யுத்த முனைப்பாகும்.

## போரிடும் மன நிலைக்கு...

ஆசிரியர்கள், பரீட்சை பிற்போடப்பட்டதிலிருந்து நாட்டு நிலை மையால் அதே முனைப்புடன் கற்பித்தலை முன்னெடுக்க வில்லை. இதனால் முதலில் மிகவும் ஆர்வமாகப் படித்துக் கொண்டிருந்த மாணவர்கள் கூட பின்னர் நடாத்தப்பட்ட பரீட்சையில் நன்றாக செய்யவில்லை என்பதை அறிய முடிந்தது.

அத்துடன் ஏ-9 பாதை மூடப்பட்டதன் பின்னர் ஏற்பட்ட இடப்பெயர்வுகள், காணாமல் போதல், ஆட்கடத்தல்கள், களவுகள், கொலைகள் போன்றவற்றால் எத்தனையோ சிறுவர்கள் மனநிலை பாதிப்படைந்த நிலையிலுள்ளனர்.

இதனால் கடந்த டிசம்பர் மாதத்தில் நடந்த க.பொ. த. (சா/த) பரீட்சையைக் கூட மாணவர்களால் திறமையாக செய் திருக்க முடியாது என்பது வெளிப்படையாகும். இதை விட இந்நிலை தொடர்ந்தால் எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் நடை பெறப்போகும் க.பொ.த.(உ/த) பரீட்சையிலும் இவற்றின் தாக்கம் கடுமையாக இருக்கும் என தனது கவலையைத் தெரிவிக்கும் கலாநிதி சிவயோகன் அவர்கள்,

வடபுலத்தில் பல்கலைக்கழகக் கல்வி கூட மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது என்கிறார். பல்கலைக்கழகத்தில் பரீட் சைகள், கற்பித்தல் செயற்பாடுகள் எல்லாம் இடை நடுவில் அரைகுறையாக நிறுத்தப்பட்டுள்ளன. மீள ஆரம்பிக்கும் போது மாணவர்கள் தாம் படித்த எவ்வளவோ விடயங் களை மறந்திருப்பார்கள்.

பல்கலைக்கழகம் மீள ஆரம்பித்து அப் பரீட்சைகள் திரும்பவும் நடாத்தப்படும்போது மாணவர்களின் விடைய ளிக்கும் ஆற்றல் நிச்சயமாகக் குறைந்திருக்கும். அவர் களின் அடைவு மட்டம் மிகவும் குறையப் போகிறது என்றே கூறவேண்டும். இவர்கள் பின்னர் ஆசிரியர்களாகச் சென்று கற்பிக்கும் போது அக் கல்வியின்தரம் பாதிக்கப்படுவது எதிர்பார்க்க வேண்டியதே.

தற்போது பாடசாலைகள் இயங்கிக் கொண்டிருக்கின் றன. ஆயினும் ஆசிரியர்களால் பழைய வேகத்தில் கற்பிக்க முடிகிறதா? என்று பார்த்தால் இல்லை என்றே கூறவேண்டும். உணவுப் பொருட்களுக்கு நீண்ட வரிசையில் காத்திருந்த களைப்பும், சிக்கின்குனியா நோயுடன் போராடி விட்டு உகந்த மருந்தோ, உணவோ இல்லாத நிலையில் ஆசிரியர்க ளிட மிருந்தும் மாணவர்களிட மிருந்தும் உன்னதமான வெளியீட்டை எதிர்பார்க்கலாமா ? நிச்சயம் இல்லை என்றே கூறவேண்டும். போதிய சத்து ணவு இன்றி யாழ். குடாநாட்டு மாணவர்கள் பலர் பாடசாலை களில் மயங்கி விழும் செய்திகளை தினசரி அறிகின்றோம். இப்படியாக நடைபெறும் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகள் தரமானதாக இருக்காது என்றே கூற வேண்டும்.

எனவே ஏ-9 பாதை தொடர்ந்து மூடப்பட்டு இடப் பெயர்வு, காணாமல் போதல், ஆட்கடத்தல், கொலைகள் என்பன தொடர்ந்தும் நடைபெற்றால், கல்வி பெருமளவு பாதிக்கப்படும் என்பதுடன், மாணவர்களிற்கும் ஏன் ஆசிரி யர்களிற்கும் கூட கல்வி சம்பந்தமான நாட்டம் குறைந்து அவர்களின் கவனம் போரின் பக்கம் திரும்ப வாய்ப் புகள் உண்டு.

ஏ-9 பாதை திறந்திருந்து பேச்சுவார்த்தைகள் நடை பெற்றுக்கொண்டிருந்த போது "இப்படியே இருந்தாலே போதும்" என நினைத்த மக்கள் கூட இன்றுள்ள நிலை மையில் விரக்தியடைந்து "இதை விட சாகலாம் போலுள் ளது" எனக் கூறுவதை அவதானிக்க முடியும்.

கல்விக் கூடங்களில் படிப்பு இல்லை எனும் போது வீட்டிலும் ஒழுங்கான படிப்பு இருக்காது. அத்துடன் "அங்கு அது நடந்தது", "இங்கு இது நடந்தது" போன்ற செய்திகள் எல்லாம் அவர்களின் கல்வி நாட்டத்தைக் குறைத்து ஒரு போரிடும் மனநிலைக்குத் தள்ளும் என்றே எதிர்பார்க்கலாம்.

அத்துடன் உணவுப்பொருட்கள், எரிபொருட்கள், சவர்க் கார வகைகள், எழுதுகருவிகள், காகிதாதிகள் என அனை த்து அத்தியாவசியப் பொருட்களிற்கும் ஏற்பட்டுள்ள தட்டுப் பாட்டால் எத்தனையோ குடும்பங்கள் மிகவும் சிரமப்பட் டுக்கொண்டி ருக்கின்றன.

இச் சிரமங்களால் அவர்கள் தங்கள் பிள்ளைகளின் கல்வியில் கூட கவனம் செலுத்த முடியாத நிலையில் உள் ளனர். ஏ-9 பாதை மூடப்பட்டுள்ளதாலும் வேறு மார்க் கங்க ளினூடான பயணத்தடைகள், இறுக்கங்களா லும் உயர்படிப்பிற் கோ, போட்டிப் பரீட்சைகளிற்கோ, மருத்துவ தேவைகளிற்கோ, வெளிநாட்டுப் பயணங்களிற்கோ அல்லது தொழில் வாய்ப் புக்களை தேடியோ வெளிமாவட்டங்களுக்குச் செல்ல முடியா மல் உள்ளதால் பலர் தமக்குக் கிடைத்த அரிய பல சந்தர்ப்பங்களை தவறவிட்டு விரக்தியடைந்த நிலையில் உள்ளனர்.

இப்படியாக ஒரு இனத்தின் கல்வி நசுக்கப்படும் போது அவ்வினம் வீறுகொண்டு எழுந்து போராடிய சரித்திரங்கள் பல உள்ளன. எனவே பொறுப்புள்ள அரசாங்கம் இவ்வாறு கல்வியை நசுக்கி யுத்தத்தைத் தூண்டும் முனைப்போடு செயற்படாமல் ஏ-9 பாதையை உடனடியாகத் திறந்து இங்குள்ள மாணவர் களின் கல்விச் செயற்பாடுகள் மேலும் பாதிக்கப்படா தவாறு இயல்பு நிலையில் செயற்பாடுகளை முன் னெடுத்து, வேலைவாய்ப்புகளை வழங்கி கௌரவமாக, சுத திரமாக வாழ விட வேண்டும் என்ப தே எனதும் குடாநாட்டு கல்வியியலாளர்கள் அனைவரினதும் விருப்பமாகும்.

# பயங்கரவாதத்தை ஒடுக்க அரசுக்கு ஒத்துழைப்பு !

## ஜே.வி.பி.தெரிவிப்பு

(கொழும்பு)

பயங்கரவாதத்தை ஒடுக்கும் செயற்பாட்டில் அரசாங்கத்திற்கு ஒத்துழைப்பு வழங்குவதாக ஜே.வி.பி. தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக மாநாட்டில் உரையாற்றிய ஜே.வி.பியின் பிரசார செயலர் விமல் வீரவன்ச இதனைத் தெரிவித்துள்ளார்.

கடந்த ஜனாதிபதி தேர்தலில் உறுதியளிக்கப்பட்ட மகிந்த சிந்தனைக்கு அப்பாற்பட்டு செயற்படுமாக இருந்தால் அரசாங்கத்திற்கு எதிராக தாம் செயற்பட வேண்டியிருக்கும் என அவர் எச்சரித்தார். மகிந்த சிந்தனையின் அடிப்படையிலேயே 18 பேரும் ஐக்கிய தேசியக்கட்சியில் இருந்து அரசாங்கத்தில் சேர்ந்திருப்பதாக விமல் வீரவன்ச குறிப்பிட்டார். (ச-3)



ஜாதிக ஹெல உறுமய ஜனாதிபதியுடன் இணைந்ததைத் தொடர்ந்து அக்கட்சியின் ஆலோசகர் சம்பிக்க ரணவக்க சுற்றாடல் அமைச்சராக பதவியேற்றுள்ளார். நேற்று ஜனாதிபதியின் முன்னிலையில் அவர் அமைச்சராக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

# அடையாள அட்டை இல்லையென்பதற்காக ஒருவரை கைது செய்ய முடியாது!

## வவுனியா நீதிபதி பொலிஸாருக்கு அறிவுரை

வவுனியாவில் இடம் பெறுகின்ற படையினரின் சுற்றிவளைப்பு தேடுதல்களின் போது சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்படுவர்களை சரியான குற்றச்சாட்டுக்களோ ஆதாரங்களோ இல்லாமல் விளக்கமளிக்கமறியலில் தடுத்து வைக்க முடியாது என வவுனியா மாவட்ட நீதிபதி எம்.இளஞ்செழியன் பொலிஸாருக்கு சுட்டிக்காட்டியுள்ளார்.

வவுனியா நகரப் பகுதியில் பொலிஸார் மீது நடத்தப்பட்ட கைக்குண்டுத்தாக்குதலின் பின்னர் இடம் பெற்ற சுற்றிவளைப்பின் போது கைது செய்யப்பட்டவர்களை நீதிமன்றத்தில் ஆஜர் செய்து அவர்கள் தொடர்பான புலன் விசாரணைகள் முடியவில்லை என்றும் விசாரணைகள் முடியும் வரையில் அவர்களை விளக்கமறியலில் தடுத்து வைக்க வேண்டும் என்றும் தெரிவித்து பொலிஸார் விடுத்த வேண்டுகோளின் போதே வவுனியாமாவட்ட நீதிபதி இவ்வாறு தெரிவித்துள்ளார். (ச-5)

# நோர்வேத் தூதுவர் பிறட்ஸ்கர் விடுதலைப்புலிகளுடன் சந்திப்பு

(கிளிநொச்சி)

இலங்கைக்கான நோர்வேத்தூதுவர் ஹான்ஸ் பிறட்ஸ்கர் நேற்று கிளிநொச்சிக்குச் சென்று விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை சந்தித்துக் கலந்துரையாடினார்.

தரைவழியாக கிளிநொச்சிக்குச் சென்ற நோர்வே தூதுவருடன் விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பணிமனையில் இச் சந்திப்பு இடம் பெற்றது.

இச் சந்திப்பில் தடைப்பட்டுப் போயுள்ள சமாதான நடவடிக்கைகள், தற்போதைய யுத்த சூழ்நிலையில் விடுதலைப்புலிகளின் நிலைபாடு என்பன குறித்து விரிவாக கலந்தாலோசிக்கப்பட்டுள்ளது.

இச் சந்திப்பினை முடித்துக் கொண்ட பிறட்ஸ்கர் நேற்று மாலை கொழும்பு திரும்பியதாக தெரிவிக்கப்பட்டது. இதேவேளை நேற்று முன்தினம் கண்காணிப்புக்குழுப் பிரதிநிதிகள் விடுதலைப்புலிகளின் சமாதான செயலகப் பணிப்பாளர் புலித்தேவனை சந்தித்துக் கலந்துரையாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

## வவுனியாவில் கிளைமோர் சிப்பாய் உயிரிழப்பு

வவுனியா மகாரம்பைக்குளம் பகுதியில் நேற்று காலை 9.50 மணியளவில் இடம் பெற்ற கிளைமோர் தாக்குதலில் இராணுவச் சிப்பாய் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

வீதிரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த படையினரை இலக்கு வைத்தே இத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை வவுனியா மன்னார் வீதியிலுள்ள பொலிஸாரின் காவலரண் மீது கைக்குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் இச் சம்பவத்தின்போது சேதங்கள் எதுவும் ஏற்பட வில்லை என பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (எ-3)

# நாட்டில் இன்று அராஜகம்...

அமைச்சரவையில் இணைந்து கொண்டதன் மூலம் தேசிய இனப்பிரச்சினைத் தீர்வுக்கு தாம் தயாராக இல்லை என்ற செய்தியையும் ஆட்சியாளர்கள் அறிவித்துள்ளார்கள்.

ஐக்கிய தேசியக்கட்சியிலிருந்து ஆளும் தரப்புக்குத் தாவியுள்ள எம்.பிக்கள் ஒரே நாடக வசனத்தையே மீண்டும் மீண்டும் பேசுகிறார்கள்.

தங்களது இனத்தின் வெற்றிக்காகவும் நாட்டின் ஒருமைப்பாட்டிற்காகவும் ஜனாதிபதியின் கரங்களை தாம் பலப்படுத்துவதற்காகவே அரசாங்கத்தில் இணைவதாக அவர்கள் ஒவ்வொருவரும் அறிவித்து வருகிறார்கள்.

இவர்கள் சொல்வது உண்மையானால் அதற்கு அமைச்சர்களாக பதவியேற்க வேண்டுமென்ற கட்டாயம் கிடையாது.

வெறு மனே பாராளுமன்ற உறுப்பினர்களாகவே இவர்கள் ஆளும் தரப்பில் அமர்ந்து ஜனாதி பதியின் கரங்களை பலப்படுத்தலாம்.

ஆனால் பதவி அதிகாரங்கள் இல்லாமல் வெறுமனே அரசாங்கத்தில் இணைவதற்கு இவர்கள் ஒருவருமே தயாராக இல்லை. தேசிய ஐக்கியம், ஒருமைப்பாடு என்ற வார்த்தைகளை பயன்படுத்தி அவர்கள் போடும் தேசபக்த நாடகம் ஒரு பித்தலாட்டம் என்பதை புரிந்து கொள்வது சுலபமானதாகும்.

இத்தகைய தேசப் பக்தர்கள் தான் இன்று நாட்டை ஆட்சி செய்கின்றார்கள்.

இவர்கள் தான் சிங்கள மக்களை வழிகாட்டி அழைத் துச்சென்று தமிழர்களின் போராட்டத்தை பயங்கரவாதம் என அடையாளப்படுத்து கின்றார்கள்.

தமிழ்,முஸ்லிம் கட்சிகளும் இடதுசாரி கட்சிகளும், ஜாதிக ஹெல உறுமய என்ற அதிதீவிர சிங்கள பௌத்த கட்சியையும் ஒரு சேரவைத்துக் கொண்டு ஒற்றையாட்சி முறையின் கீழ் இனப்பிரச்சினைக்கு இவர்கள் காணப்போகும் தீர்வு எத்தகையதாக இருக்க முடியும்?

இத்தகைய தொரு வேடிக்கையான ஆட்சி முறையை இலங்கை வரலாற்றில் இதற்கு முன்னர் நாம் காணவில்லை. இந்த ஆட்சி தனது உள்ளக சிக்கல்களின் மூலமாகவே விரைவில் முடிபுக்கு வரும்.

இந்த அரசாங்கத்தை பதவிக்குக் கொண்டு வந்த சிங்கள மக்களே விரைவில் ஒரு புதிய மாற்றத்திற்கு வழிகோலுவார்கள். (ச-5)

## வெளிவிவகார...

தெரிவித்துள்ளார்.

ஜேர்மன் வெளிவிவகார அமைச்சர், அந்நாட்டு சர்வதேச அபிவிருத்தி ஒத்துழைப்பு திணைக்களத்தின் அதிகாரிகள் ஆகியோரையும் அவர் சந்தித்து பேச்சுவார்த்தைகள் நடத்தவுள்ளார். இந்த விஜயம் நிறைவடைந்ததும் வெளிவிவகார அமைச்சர் நாளை நாடு திரும்புவார். (ச-3)

## சுதந்திரக்கட்சியிலிருந்து...

ரணில் விக்கிரமசிங்கவை தவறான திசையில் வழிநடத்திக் கொண்டிருந்தவர் கள் இப்போது விலகிவிட்டார்கள். ஆனால் ஐக்கிய தேசியக்கட்சி இனி சரியான திசையில் பயணிக்கும்.

உதாரணமாக சந்திரிகா ஆட்சியின் போது மூன்று அமைச்சுக்களை திடீரெனப் பறித்தெடுத்தார். அப்போது உடனடியாக பொதுத் தேர்தல்களுக்கு மீண்டும் ரணில் செல்ல விரும்பியபோது அக்கட்சிக்குள்ளே இருந்தவர்கள் தங்களது சுய லாபங்களுக்காக ரணிலை தவறான வழியில் வழிநடத்தி தேர்தல் வராமல் தடுத்துவிட்டார்கள்.

இறுதியில் சந்திரிகா நாடாளுமன்றத்தையே முடக்கி பல்வேறு குழப்பங்களையும் உருவாக்க அது வாய்ப்பாக அமைந்தது என்று அபவர்த்தன விளக்கினார். (ச-5)

# மரண அறிவித்தல்

## கந்தையா செல்வராசா

(ஓய்வு பெற்ற S.A
நெடுங்கேணி
பிரதேச செயலகம்)



காரை நகரை பிறப்பிடமாகவும் வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா செல்வராசா 01.02.2007 வியாழக்கிழமை (நேற்று) கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா பொன்னம்மாவின் மகனும், நாகலிங்கம் வள்ளியமை தம்பதியினரின் மருமகனும், புாக்கியலக்ஷ்மியின் கணவரும், லோகேந்திரன் (அவுஸ்திரேலியா), இராசேந்திரன் (லண்டன்), லோகினி ஆகியோரின் தந்தையும்,

இராஜரட்ணம் (லண்டன்), சரஸ்வதி (ஈச்சமோட்டை, யாழ்ப்பாணம்), ஜெயசோதி (அவுஸ்திரேலியா), துரைராஜா (லண்டன்) ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றி பின்னர் அறிவிக்கப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
சகோதரி-சரஸ்வதி
மைத்துனர்-தருமபாலன்
ஈச்சமோட்டை.

T.P.021 222 3331

(603)

# யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை...

யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை அமுல்படுத்துவதில் ஏற்பட்டுள்ள சிக்கல்நிலை மற்றும் சமாதான முயற்சியில் ஏற்பட்டுள்ள தடங்கல்கள் என்பன குறித்து ஆராய போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினரும் நோர்வேத் தூதுவரும் கிளிநொச்சிக்கு விஜயம் செய்தனர்.

நேற்று அவர்கள் தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்து கலந்துரையாடினர் என போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் பேச்சாளர் தெரிவித்தார்.

கடந்த வருடம் நவம்பர் மாதத்திற்கு பின்னர் இத்தகைய உயர் மட்ட பேச்சுவார்த்தை நடைபெற்றமை முதலாவது தடவையென குறிப்பிட்ட அவர், இது மிகவும் சாதகமாக அமைந்தது எனவும் கூறினார்.

கடந்த சில மாதங்களாக நாட்டிலும் இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவிலும் ஏற்பட்ட மாற்றங்கள் குறித்து விடுதலைப்புலிகளுக்கு காரணங்களை வெளிப்படுத்த வேண்டிய அவசியம் இருந்ததாக மேலும் குறிப்பிட்ட அவர்,

இதற்காகவே போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு அரசின் அனுமதி பெற்று கிளிநொச்சி சென்றதாகக் குறிப்பிட்டார். போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினால் வெளியிடப்பட்ட விடயங்களை விடுதலைப்புலிகள் மிகவும் உன்னிப்பாக செவிமடுத்துள்ளனர்.

குறிப்பாக கிழக்கு மாகாணத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் குறித்து ஆராயவேண்டிய அவசியம் விடுதலைப்புலிகளுக்கு தேவைப்பட்டதாக போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் பேச்சாளர் தெரிவித்தார்.

அரசினால் போர் நிறுத்த ஒப்பந்தம் தொடர்ந்தும் அமுல்படுத்தப்படும் என உறுதியளிக்கப்பட்டது. அது குறித்து விடுதலைப்புலிகளுக்கும் தெரியப்படுத்தப்பட்டது.

அதனை கேட்டறிந்து கொண்ட விடுதலைப்புலிகள் தமிழ் மக்கள் மீதான வன்முறைச் சம்பவங்கள் இடம் பெறுவதைத் தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்தனர் என போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் பேச்சாளர் தொர்பினூர் ஓமர்சன் தெரிவித்தார். (ச-3)

## அதிகாரப்...

லாகம தமது முதலாவது விஜயத்தை மேற்கொண்டு இந்தியா சென்ற வேளை இந்திய வெளியுறவு அமைச்சர் பிர ணாப் முகர்ஜி இந்த வலியுறுத்தலை விடுத்துள்ளார்.

இராணுவத்தினருக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையிலான மோதலினால் தமிழ் மக்களே பிரதானமாக பாதிக்கப்படுகின்றனர். இந் நிலையில் இலங்கையின் பிரதான எதிர்க்கட்சி சமஷ்டி முறைத்தீர்வை முன்வைத்திருப்பதாக பிரணாப் முகர்ஜி சுட்டிக்காட்டியுள்ளார்.

இதற்கு பதிலளித்த வெளிவிவகார அமைச்சர் ரோகித போகொல்லாகம இலங்கை அரசாங்கம் அனைத்துக் கட்சியின் இணக்கத்துடன் தனது தீர்வுத்திட்டத்தை முன்வைக்குமென உறுதியளித்துள்ளார்.

பயங்கரவாதத்தை அடக்கும் அதே நேரம் சமாதான முனைப்புகளுக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் பங்காளர்கள் ஆவர் எனவும் அவர் மேலும் கூறியுள்ளார். (ச-3)

இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ.ஸ்தாபனத்தாரால் இல.03, இரண்டாம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 02.02.2007 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.